
Regd. No. M. 4392

உங்களுக்கு ரயில் மூலம் வரும் சாமான்களை எடுத்து வரவோ அல்லது வெளியூர்களுக்கு சாமான்களை அனுப்பவோ நீங்கள் சிரமப்பட வேண்டாம்.

: விவரங்களுக்கு எழுதுங்கள் :



மதராஸ் & தென் மராட்டா ரயில்வேக்கு லோகல் டெலிவரி கண்ட்ராக்டர்கள்

202-3, மவுண்டு ரோடு (போன் :-8536) மதராஸ்.

Edited, printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

இந்தியன் பாங்க்
லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி,
மயிலாப்பூர், தியாகராய நகர்,
புரசவாக்கம், மவுண்ட் ரோடு.

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிரான்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (31-12-43வரையாக)	ரூ.	28,90,385
ரிஸர்வ் நிதி	ரூ.	30,50,000
டெபாஸிட்கள்	ரூ.	8,13,62,549

சேவிங்ஸ் பாங்கு கணக்குகள் ரூ. 5-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் வைத்துக் கொள்ளப் படும். தினசரி பாக்கித் தொகைகளின் பேரில் 2½% விதம் — வட்டி கொடுக்கப்படும். —

பூரா விவரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி.



எல்லாவிதமான சிகிச்சையாலும் கைவிடப்பட்ட, முற்றிப்போன ஈரல்குலைப் பெருக்கத்தினின்றும் என் உயிரைக் காப்பாற்றியது.

ஈரல் குலைக்கட்டி முதலியவைகளுக்கு இது ஒரு அதி அற்புத நிவாரணி.

எல்லா மருந்து ஷாப்பிலும் கிடைக்கும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்
மயிலாப்பூர் மதராஸ்

சப் ஆபீஸ்: கும்பகோணம்

பிராஞ்சுகள்: பம்பாய், கல்கத்தா, லக்னோ, திருச்சிராப்பள்ளி, பெங்களூர்.

சந்தோஷச் செய்தி!

ஏப்ரல் 1உ முதல்

கல்கி

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்.

சனிக்கிழமையன்றே நேயர்களுக்குப்
பத்திரிகை கிடைக்கும்.

ஏப்ரல் 1உ முதல்

சந்தா விவரம்

வருஷ சந்தா	ரூ.	13—0—0
6 மாத சந்தா	ரூ.	6—8—0
தனிப் பிரதி	அணா	0—4—0

மானேஜர்

கல்கி காரியாலயம்

சென்னை

கல்கி



KALKI மார்ச் 20, 1944 4 அணா



இதை அளிப்பதிலேயே ஒரு அலாதி அந்தஸ்து

டிலக்ஸ் டெனர் சிகரெட்டை உங்கள் சிநேகிதர்கள் ரஸிப்பார்கள். 100% உத்தர வாதமுள்ள தூய வர்ஜீனியா புகையிலையி லிருந்துதான் டெனர்ஸ் தயாரானவை. டெனர் சிகரெட்டுகள் உங்களது ரஸிகத் தன்மைக்கு ஒரு அத்தாட்சி ஆகும். இவை களின் தனி மணம் இவைகளுக்கே உரித் தானது. மெல்லிய தொண்டை உடைய வர்கள் அனுபவிக்கக் கூடியது டெனர்தான்.

tenor

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லிட்., லண்டன்

is truly a
de Luxe Cigarette

JAMES CARLTON LTD., LONDON. EASTERN LICENCEES. POST BOX NO. [illegible], CALCUTTA

தேயிலையின் சரிதம் - 7



டார்ஜீலிங் தோட்டத்தில் ஜாக்கிரதையுடன் மூடப்பட்ட தேயிலை பெட்டிகள் சிறு குதிரைகளின் மேல் ஏற்றப் பட்டு அருகாமையிலுள்ள ரயிலடிக்கு வருகின்றன.

தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றம்

தொழிற்சாலையில் சரகாக்கப்பட்டு, சுருட்டப்பட்டு, புளிக்க வைத்து, உலற்றி, தோம்பப்பட்டு, ரக வாரியாய் பிரிக்கப்பட்டு, தேயிலை நமது பண்படுத்தும் இடத்திற்கு வரத் தயாராகிறது.


சாதாரணமாய் காணப்படும் தேயிலைப் பெட்டிகளில் அடக்கம் செய்யப்படுமுன் தேயிலை மறுபடி அவசரமாய் உலர்த்தப்படுகிறது. இதன் மூலம் அகஸ்மாத்தாய் அடைந்திருக்கும் சரமும் எடுக்கப்பட்டு விடுகின்றது.


பண்படுத்தி, பைகளில் நிரப்பப்படும் சாலையில், அனுபவசாலிகளான தொழிலில் தேர்ந்தவர்கள் ப்ரூக் பாண்டு தேயிலையின் உயர்ந்த ரகங்களை பொருக்கி நிரப்புகிறார்கள்.

ப்ரூக் பாண்ட்



அது ருசிகரமாகவும், திருப்தி அளிக்கக்கூடியதாகவுமிருக்க வேண்டியது . . . ஆனால் அது ஊக்கத்தை அளிக்கவும் வேண்டும்!





நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு சமையல் செய்யும்பொழுது எப்பொழுதாவது இதைப் பற்றி யோசிப்பதுண்டா? உணவிற்கு சுவை மாத்திரமிருந்தால் போதாது—அதை உண்பவருக்கு ஊக்கத்தையும் கொடுக்கக்கூடியதாயிருக்கவேண்டும். சில உணவுகள் மற்றவைகளைவிட ஊக்கமளிக்கக் கூடியவை. நாம் வழக்கமாக உட்கொள்ளும் பல ஆகாரங்கள் ஊக்கத்தை யளிக்கக் கூடியவைகளல்ல. அவை நம் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல. உண்மையில் அவைகள் முக்கியமாக குழந்தைகளுக்கு கெடுதல் செய்யவும் கூடும். ஆனால் ஆகாரங்களை ஊக்கமுள்ளவையாகச் செய்வது கடினமில்லை. வைடமின் நிறைந்த டால்டாவினால் சமையல் செய்வது ஒரு வழி. டால்டா இயற்கையாய் ஊக்கமளிக்கக் கூடிய சில முக்கிய வஸ்துக்களை அளிக்கிறது. மேலும் டால்டாவைக் காட்டிலும் உணவுகளுக்கு ருசி அளிக்கும் வஸ்து வேறே கிடையாது. நீங்கள் உபயோகித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக்புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியுள்ளது) உணவுப் பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. உங்களிடம் ஒரு பிரதி இருக்கவேண்டியது அவசியம். Dept. A133 P.O. Box No. 353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HINDUSTAN VANASPATI MANUFACTURING CO. LTD.



ஸ்ரீ ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட் (ரிடியூஸ்டு) பம்பாய் 15

சேல்ஸ் டிப்போ : 21, பேக்கர் தெரு, ஜி. டி., மதராஸ்.

கந்தசாமி "இவ்வளவுதானே! சோறு வேண்டாம்" என்று மரத்தடியில் போய்ப் படுத்துக் கொள்வான். இதைப் பார்த்த கண்ணம்மாவிற்கு மனம் இளகி விடும். அவளே சென்று விறகு வாங்கி வருவாள்.

ஆனால், அவள் இருக்கும் இடத்தில் ஒரே ஒரு விறகுக் கடைதான். அக் கடைக்காரன் அதற்குத் தனிக் காட்டு ராஜாவாக இருந்து, காட்டு விறகுகள் கிடைத்தால் அவனுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் கொடுப்பான். அவர்கள் வாங்கிக்கொண்டு போனாலோ, அவ் விறகுகள் புகையும் புகைச்சல் கண்ணை அவித்துவிடும். ஆனால் ஏதோ விறகு என்று ஒரு வஸ்து கிடைக்கிறதே என்று வாங்கி வருவார்கள். அப்படி அவனிடம் விறகு வாங்குபவர்களில் கண்ணம்மாவும் ஒருத்தி. அவள் பணம் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், அக்கடைக்காரனைத் திருப்தி செய்யத் தன் மாமரத்திலிருந்து கனிந்த மாங்கனிகளையும் சேர்த்துக் கொடுப்பாள்.

ஒரு நாள், கண்ணம்மா விறகு வாங்க வந்தாள். கடைக்காரன் அவளை ஒரு மணி நேரம் கழித்து வரும்படி கூறிவிட்டுத் தன் காரியத்தைக் கவனிக்கலானான். ஒரு மணி நேரம் கழித்துக் கண்ணம்மா வந்தபோது கடைக்காரன் சில்லறைகளை எண்ணிக் கொண்டிருந்தான். விறகுகள் எல்லாம் விற்றாகி விட்டன. ஆனால் மூலையில் ஒரு சுமை விறகு மட்டும் வைத்திருந்தது. அதைப் பார்த்த கண்ணம்மாவுக்கு உள்ளூறச் சந்தோஷம்.

"என்ன ஐயா, விறகு எனக்குத் தானே? இந்தா துட்டு. எடுத்துப் போகட்டுமா?" என்றாள்.

"எடுத்துப்போ. ஆனால் உன்னை ஒன்று கேட்க வேணும்."

"என்னவோ."

"ஒன்றுமில்லை, இந்த கஷ்ட காலத்தில் உனக்கு விறகு இல்லை யென்று சொல்லாமல் கொடுத்துக் கொண்டு வருகிறேனே."

"ஆமாம் ஐயா! உனக்குக் கடவுள் உதவி புரிவார்."

"அது கிடக்கட்டும், நான் அதைச் சொல்ல வரவில்லை, நீ எனக்கு எப்படி உதவப் போறே?" என்று ஓர் அசட்டுச் சிரிப்புடன் கேட்டான்.

"நானா, துட்டுக் கொடுக்கிறேன் விறகுக்கு. அதுவுமல்லாமல், நீ கேட்கும் போது பழங்கள் வேறு கொடுக்கிறேனே. அதற்குமேல் என்னால் என்ன செய்ய முடியும்."

"அதெல்லாம் சரி, நான் உன்னைக் கேட்பது ...." என்று சொல்லிவிட்டு ஒரு மாதிரியாகச் சிரித்தான்.

அந்த அசட்டுச் சிரிப்பும், பார்வையும் கண்ணம்மாவைக் கலக்கி விட்டன. அவள் கண்களில் கோபப் பொறி பறந்தது. "ஏ! நீ ஒரு மனுஷன் மாதிரி!" என்று சொல்லி விட்டுச் சட்டென்று திரும்பி வீடு வந்து சேர்ந்தாள். சேர்ந்தவள் கொல்லைப் பக்கம் போய்க் கணவனிடம் சொல்லி வைப்போமா என்று யோசித்தாள். ஆனால் ஒரு கணம் தயங்கினாள்.

விறகும் கையில் இல்லை. அடுத்த தடவை விறகுக்கு என்ன செய்வது என்று யோசித்து அவளால் ஒரு வழியும் கண்டுபிடிக்க முடியவில்லை. "ஆம் அவனுக்கு மாம்பழம் கொடுத்தோமே! அந்த இனிய மாம்பழங்கள்தான் அவனுக்கு இந்த துர்எண்ணத்தைக் கொடுத்திருக்கும். அந்த மாமரத்தை ஒழித்து விட்டு மறுகாரியம் பார்க்கிறேன்" என்று கையில் ஒரு கோடரியுடன் வெளியில் வந்தாள். மாமரங்களை வெட்டி விறகாகவும் உபயோகிக்கலாமல்லவா?

கையில் கோடரியுடன் கிளம்பிய கண்ணம்மா வாசற்படியில் நின்று விட்டாள். அப்பொழுதுதான் "அப்பாடா!" என்று கூறிக்கொண்டே கயிற்றுக் கட்டிலில் சாய்ந்தான் கந்தசாமி. "ஐயோ! மரங்களை வெட்டி விட்டால் இவர் படுக்க நிழல் ஏது?"— இந்த நினைப்பு அவளுக்கு வேதனையைக் கொடுத்தது.

அவள் கோடரியை மூலையில் விட்டெறிந்தாள். உடனே, "கண்ணம்மா! என்ன சத்தம்?" என்று கந்தசாமி கூப்பிட்டான். கண்ணம்மா பதில் சொல்லாமல் அவன் அருகில் சென்றாள்.

"கண்ணம்மா, சமாசாரம் கேட்டாயா? நம் விறகுக் கஷ்டம் தொலைந்தது. விறகுப் பங்கீடு வந்து விட்டது. அடுத்த வாரம் முதல், சர்க்காரே விறகு கடைகள் ஏற்படுத்தப் போகிறார்களாம்" என்றான் கந்தசாமி கையில் பத்திரிகையை வைத்துக்கொண்டே.

அதைக் கேட்ட கண்ணம்மாவிற்கு மனதில் ஒரு சாந்தி ஏற்பட்டது. "அப்பாடா!" என்று அவள் ஒரு பெருமூச்சு விட்டாள். கந்தசாமி அவள் கன்னத்தை ஒரு தட்டுத் தட்டினான். "போதும் போதும் கொஞ்சல். சோம்பேறி!" என்று கூறிவிட்டு ஓடினாள் கண்ணம்மாள்.

தீர்ந்த கவலை

— ராஜ் —

கண்ணம்மாவிற்கும், கந்தசாமிக்கும் கலியாணம் நடந்தபோது அவள் பெற்றோர்கள் கந்தசாமி ஒரு முழுச் சோம்பேறி என்று அறிந்திருக்கவில்லை. ஆனால் கந்தசாமி மீதும் தப்பு இல்லை. ஏனெனில், கண்ணம்மாள் கந்தசாமியை மணம் செய்து கொண்டு கணவன் வீடு வரும்பொழுது சும்மா வரவில்லை. அவளுக்கு மஞ்சள் காணியாக அழகான ஓர் சிறு வீடும் அதை ஒட்டிப் பத்துப் பதினைந்து ஒட்டு மாமரங்களும் வந்து சேர்ந்தன. அவள் ஸ்திதிக்குத் தகுந்த நகைகளும் கொடுத்தார்கள்.

தம்பதிகள் மண வாழ்க்கையைச் சந்தோஷமாகவே ஆரம்பித்தார்கள். இருக்க வீடும், உட்கார மர நிழலும், கண்ணம்மாளும் கிடைத்த பிறகு கந்தசாமிக்கு வேலை செய்யத்தான் தோன்றுமா? நாளடைவில், சாப்பிட வேண்டியது, மாமர நிழலில் கட்டிலைப் போட்டுப் படுத்துக்கொண்டு, ஏதாவது பழைய புத்தகங்களைப் படிக்க வேண்டியது—இப்படியே கந்தசாமி ஆரம்பித்து விட்டான்.

அவனை வேலைக்குப் போகவேண்டாம் என்று கண்ணம்மா தடுக்கவில்லை. ஆனால் அந்த மாம்பழங்கள்—கற்கண்டு போல் தித்திக்கும் ஒட்டுமாம்பழங்கள்—அவனை வேலைக்குப் போகாமல் தடுத்து விட்டன. அந்த மரங்களில் ஏராளமான மாங்கனிகள் காய்த்தன. சாப்பிட்டால் கண்ணம்மா வீட்டு ஒட்டு மாம்பழங்கள் சாப்பிட வேண்டும் என்று நினைப்பார்கள் அந்த ஊரில். அதற்காகவே வியாபாரிகளும் போட்டி போட்டுக் கொண்டு அக் கனிகளை வாங்க வருவார்கள். அதிலிருந்து வரும் வருமானமே கந்தசாமித் தம்பதிகளுக்குக்கண்டு மிஞ்சியது. விற்றது போக பாக்கிப் பழங்களை அவர்கள் தானம் செய்வார்கள். இப்படிச் சுகமாக வரும் படி வர ஆரம்பித்த பிறகு கந்தசாமி வேலைக்குப் போவானா? கண்ணம்மாளும் தன் கணவன் சௌக்கியமாக இருந்தால் போதும் என்ற எண்ணத்துடன் அவனைத் தொந்தரவு பண்ணாமல் இருந்தாள்.

2

இப்படியே அவர்கள் சுக வாழ்க்கை நடத்த முடியாதபடி யுத்தம் வந்து சேர்ந்தது. சாமான்கள் விலை உயர ஆரம்பிக்கப் பஞ்சம் வந்தது. இப் பஞ்சத்தைக் கண்ணம்மாவின் நகைகளைக் கரைத்துச் சமாளித்தான் கந்தசாமி. ஆனால் அவர்களால் இந்த விறகுப் பஞ்சத்தைச் சமாளிக்க முடியவில்லை.

கண்ணம்மா விறகு இல்லை என்றால் கந்தசாமி கோபித்துக் கொண்டே "என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?" என்பான்.

"என்ன செய்யச் சொல்கிறேன்? எங்கேயாவது விறகு வாங்கி வரணும்" என்பாள்.

"விறகு கிடைப்பதுதான் குதிரைக் கொம்பாய் இருக்கிறதே."

"விறகு இல்லை என்றால் சோறும் இல்லை" என்பாள் கண்ணம்மா.





கடந்த வருஷத்தில் 100% அதிகமானது

நாஷனல்

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு :—362, சைனாபஜார் ரோடு, எஸ்பிளனேட், மதராஸ்.

யும் ஊக்கமும் பன் மடங்கு அதிகரித்திருக்கின்றன என்று சொல்ல வேண்டும். அத்துடன் என்னைச் சென்ற பதினைந்து நாட்களாக ஆட்டி வதைத்த ஜலதோஷமும் நீங்கிவிட்டதினால் நான் முன்னை விட ஆரோக்கியமாயிருக்கிறேன்.



ஆகையால் எனக்குத் தாங்கள் பேட்டியளித்து அவ்வுத்தியோகத்தை யளிப்பதினால் தங்களுக்குத்தான் லாபம் என்பதை நினைவூட்டுகிறேன்.

இப்படிக்கு........

3

ஐயா,

தாங்கள் எனது இரண்டாவது கடிதத்திற்கும் பதில் போடாதது மிகவும் ஆச்சரியத்தை யளிக்கிறது. நீங்கள் என்னை இப்பொழுது பயன்படுத்திக் கொண்டால்தான் நன்மை அடைவீர்கள் என்பதை நினைவூட்டுகிறேன். இப்பொழுது எனக்குள்ள அறிவும், ஊக்கமும், உடல் வலிவும் இன்னும் சில வருஷங்கள் கழித்து இருக்கும் என்று நம்பமுடியாது. அப்பொழுது எனக்கு ஷேல்வாதமோ, அல்லது பாரிச வாயுவோ வரலாம். காது மந்தமாகி, பார்வையும் மங்கலாம். ஞாபக மறதியும் ஏற்படலாம். அத்துடன் நான் கிழவனாயும் போய்விடுவேன். ஆகையால் இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள். உங்களுக்காக வேண்டுமானால் நான் மூன்று நாட்கள் சம்பளமில்லாமல் வேலை செய்கிறேன். அதில் திருப்தி ஏற்படவில்லையென்றால் என்னைத் தாங்கள் தாராளமாக வீட்டிற்கு அனுப்பிவிடலாம்.

இப்படிக்கு.......

4

ஐயா,

என்ன காரணத்தினாலோ தாங்கள் இன்னமும் மௌனம் சாதிக்கிறீர்கள். உங்களுக்காக நான் கருணை காட்டத் தயாராயிருக்கிறேன். அதாவது இன்றையிலிருந்து இன்னும் பத்து தினங்களுக்குள் என்னை நீங்கள் வேலைக்கு எடுத்துக் கொண்டால், நான் குறிப்பிட்டு எழுதிய சம்பளத்திலிருந்து இருபது ரூபாய் குறைத்து வாங்கிக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

இப்படிக்கு.......

5

ஐயா,

தங்களுக்கு பன்னிரண்டு தினங்கள் அவகாசம் கொடுத்தும் தாங்கள் பதில் போடுவதாயில்லை. தங்களுக்கு உடனே பதில் போட சௌகரியப்படவில்லை போலிருக்கிறது. ஆகையால் நான் இன்னும் பதினைந்து நாட்கள் அவகாசமளிக்கிறேன். அதற்குள் தாங்கள் முடிவான பதில் தெரிவிக்காவிட்டால் நான் முதன் முதலில் குறிப்பிட்ட சம்பவத்தைவிட பத்து ரூபாய் அதிகமாய்க் கொடுக்க வேண்டி நேரிடும். ஆகையால் என்னைத் தாங்கள் இப்பொழுதே வேலைக்கு எடுத்துக்கொண்டால் தங்களுக்கு முப்பது ரூபாய் லாபமாகுமென்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு.......

6

ஐயா,

தாங்கள் மேலும் மௌனம் சாதிப்பது என் மனதிற்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது. தாங்கள் முடிவான பதில் தெரிவிக்காமலிருப்பதினால் எனக்கு மற்ற கம்பெனிகளிலும் வேலை ஒத்துக் கொள்ள முடியவில்லை. நீங்கள் இதற்கும் பதில் போடாவிட்டால் நான் வேறு கம்பெனியில் சேரவேண்டி நேரிடும். வேறு கம்பெனிக்குப் போன பிறகு நீங்கள் என்னை எவ்வளவு வருந்திக் கூப்பிட்டாலும் வர முடியாது என்பதைச் சொல்லி விட்டேன். அப்புறம் உங்கள் பாடு.

இப்படிக்கு......

குறிப்பு: இவ்வளவு கடிதங்களுக்கும் ஒரு கம்பெனி அசையவில்லையென்றால், அந்தக் கம்பெனியில் வேலை கிடைப்பதைவிட கிடைக்காமலிருப்பதே நலம்.



வேலைக்கு மனு

— பாரு —

★ இந்த யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து நமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் கிடையாது என்பது உண்மைதான். ஆனால் யுத்தத்துக்குப் பிறகு நிலைமை இப்படியே இருக்கும் என்று சொல்ல முடியாது. எல்லாரும் பழைய குருடி கதவைத் திறடி யென்று அலைய வேண்டி யிருக்கலாம். அப்பொழுது உங்களுக்கு நிச்சயமாக வேலை கிடைக்க வேண்டும் என்றால், இதோ நான் சொல்லப் போகும் முறையைக் கையாண்டால்தான் நல்லது.

சில வியாபாரிகள் தங்கள் சரக்கை விற்பதற்கு நோட்டீஸிற்கு மேல் நோட்டீஸ் அனுப்பிக் கொண்டே யிருப்பார்கள். ஒரு நோட்டீஸில், "எங்கள் சரக்கைப் போல் உயர்ந்தது வேறெங்கும் கிடையாது. இப்பொழுது உங்களுடைய நலனுக்காக சரக்கின் விலையை 6¼% குறைத்திருக்கிறோம்" என்றிருக்கும். அடுத்த நோட்டீஸில், "சரக்குகள் அநேகமாய் ஆய்விட்டன. இப்பொழுது விலையைப் பழைய படியும் 6¼% குறைத்திருக்கிறோம். இது இன்னும் பத்து நாட்களுக்குத்தான். அதற்கப்புறம் சரக்குகளின் விலை 12½% உயரும். ஆகையால் இப்பொழுதே முந்துங்கள்!" — இந்த மாதிரி நோட்டீசுகளை மேலே மேலே அனுப்பி நச்சரித்து ஒரு ரூபாய்க்காவது தங்கள் சரக்கை வாங்கும்படி செய்து விடுவார்கள்.



இதே முறையை நாம் உத்தியோக விஷயத்திலும் கையாள வேண்டும். இந்த வியாபாரிகள் மேலும் மேலும் நோட்டீஸ்கள் அனுப்பிக் கொண்டே யிருப்பது போல் நாமும் முதலில் ஒரு விண்ணப்பம் அனுப்புவதுடன் நிற்காமல் பின்வருமாறு மேலும் மேலும் கடிதங்கள் எழுதி நச்சரித்துக் கொண்டே யிருக்க வேண்டும்.



1

ஐயா,

தாங்கள் "வைடூரிய மணி" என்ற பத்திரிகையில் பிரசுரித்துள்ள தங்கள் விளம்பரத்தைப் பார்த்தேன். நான் தங்கள் கம்பெனியில் குமாஸ்தாவாகச் சேர விரும்புகிறேன்.

நான் பி. ஏ. முதல் வகுப்பில் 'பாஸ்' செய்திருக்கிறேன். 'ஷார்ட் ஹாண்ட் டைப் ரைட்டிங்'கில் எனக்கு நிகர் நானே தான். எனக்கு அபாரமான அறிவும் ஊக்கமும் உண்டு. தங்கள் கம்பெனியின் முன்னேற்றத்திற்காக நான் எனது உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் தியாகம் செய்யத் தயாரா யிருக்கிறேன்.


நான் இதற்கு முன் வழவழ. கொழ கொழ. வயித்தான் செட்டியார் கம்பெனியில் குமாஸ்தாவாக இருந்தேன். தடுக்க முடியாத சில சந்தர்ப்பங்களால் நான் எனது பழைய வேலையை விடும்படி நேரிட்டது. தாங்கள் எனக்குப் பேட்டி யளிக்கும் பட்சத்தில் எல்லாவற்றையும் விவரமாய்க் கூறி எனது யோக்கியதையையும் நிரூபித்துத் தங்களுக்குத் திருப்தி யளிக்கத் தயாரா யிருக்கிறேன். நான் இவ் வேலைக்குக் கோரும் சம்பளம் ரூபாய் நூறு. அவ்வளவுதான்.

இப்படிக்கு.......

2

ஐயா,

இரண்டு வாரங்களாகியும் தாங்கள் எனது கடிதத்திற்குப் பதில் போடாதது மிகவும் வருத்தத்தை யளிக்கிறது. எனது கடிதம் உங்களுக்கு வந்து சேரவில்லையா? இல்லை, உங்களுக்கு எனது யோக்கியதாம்சங்களின் பேரில் நம்பிக்கை ஏற்படவில்லையா? அப்படியாயின் நீங்கள் அந்த சந்தேகத்தை உடனே விட்டு விடுங்கள். நான் எனது யோக்கியதையை எவ்விதத்திலும் உயர்த்திச் சொல்பவனே யல்ல. இன்னும் பார்க்கப் போனால் இந்த இரண்டு வாரங்களில் எனது மனோ வலிமை



வாசலில் வந்து வந்து பார்த்து விட்டுச் சென்றான்.

சந்திர சேகரன் வருவதற்குச் சிறிது நேரமாகி விட்டது. வருகிறபோதே வாசலிலிருந்து இரைந்து கொண்டு வந்தான். ‘‘உமா, உமா! நான் சொன்னதெல்லாம் ரொம்பத் தப்புத்தான். பெண்கள் விடுதலை அவசியமானதுதான். பெண்கள் விடுதலை ரொம்ப அவசியம் என்பதில் சந்தேகமே இல்லை’’ என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தான்.

‘உரிமைகள் ஒன்றுமில்லாமல் பெண்கள் அடைந்து கிடந்திருந்தால், இன்று தங்க மணிக்கு இது மாதிரியான புகழ் கிடைத்திருக்குமா? அவளுடைய நடிப்புச் சக்திதான் வெளியில் தெரிந்திருக்குமா?’ என்று சொல்ல வாயெடுத்தான் சந்திர சேகரன். ஆனால் உமாவின் முகத்தைப் பார்த்ததும் அவன் சொல்ல எண்ணிய வார்த்தைகள் வாயிலிருந்து வரவில்லை. அறுந்த முத்து மாலையிலிருந்து உதிரும் முத்துக்களைப்போல் அவளுடைய கண்களிலிருந்து நீர்த் துளிகள் உதிர்ந்தன. ‘‘வேண்டவே வேண்டாம். பெண்களுக்கு விடுதலையே வேண்டாம். பெண்கள் விடுதலை அவசியமோ இல்லையோ, இந்த ‘பெண்கள் விடுதலை’ நாடகம் நிச்சயமாக வேண்டவே வேண்டாம்’’ என்று கதறினாள் உமா.

மாமூல் கேள்வி!



கண் வைத்தியர்:—இந்த மருந்தைத் தினம் இரண்டு வேளை கண்ணில் போட்டுக்கொண்டு வா, எல்லாம் சரியாகப் போய்விடும்.

புத்திசாலிச் சிறுவன்:—சாப்பிடுவதற்கு முன்னாடியா, பின்னாடியா, டாக்டர்?

ஒரு நிமிஷக் கதை



இடம் கிடைத்ததா?

‘‘பகீரதன்’’

‘மிச்லின் டயர்’ கம்பெனியாரின் ‘டிரேட் மார்க்’கைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் பத்மநாப ஐயரைப் பார்க்க வேண்டியதில்லை. அதற்கும் அவருக்கும் உருவத்தில் ஒரு வித்தியாசமும் கிடையாது. ஆகவே அவர் ரயில் பிரயாணம் செய்ய வேண்டிய அவசியம் நேரிடும்போதெல்லாம், ‘‘பகவான் நம்மைப் படைத்தாரே. பறப்பதற்கு இரண்டு இறக்கைகளைக் கொடுத்திருந்தால் என்ன?’’ என்று கவலைப்பட ஆரம்பித்து விடுவார்.

இந்தக் கவலை தீராத கவலை என்று தெரிந்து கொண்டுதான் அன்று அவர் தன் குடும்ப சகிதம் ரயிலடிக்குக் கிளம்பினார். எப்படியோ முக்கி முனகிக்கொண்டு மூன்று டிக்கட்டுகளை வாங்கித் தொலைத்தார். ஆனால் டிக்கட் வாங்கி என்ன பிரயோஜனம்? ஸோல்ஜர்கள் இடம் கொடுத்தால் தானே இந்தக் காலத்தில் ரயில் வண்டியில் ஏறலாம்? முக்கால்வாசி எல்லா பெட்டிகளிலும் இருந்த ஸோல்ஜர்கள் இவரை அடித்துத் துரத்திவிடவே இவர் கடைசியாக ஒரு பெட்டிக்கு வந்து சேர்ந்தார்.

அந்தப் பெட்டிக்குள் நுழைந்ததும் அங்கே படுத்திருந்த ஒருவன் மீது ஐயருடைய கவனம் சென்றது. அந்த ஆசாமி எழுந்து உட்கார்ந்தால் அவர்கள் மூவருக்கும் இடம் கிடைத்து விடும். ஆனால் அவனை எழுப்புவதற்கோ பத்மநாபய்யருக்குப் பயம்!

‘கார்டை’க் கூப்பிட்டு எழுப்பச் சொல்லலாமா என்று நினைத்தார். ஆனால் அந்த ‘கார்டு’ ‘‘போம், ஐயா! உமக்கு வேறு வேலை இல்லையாக்கும்?’’ என்று அவர் மீது ‘சள்’ளென்று விழுந்தால்?

‘‘சரி, ரயில் கிளம்பி ‘டிக்கட்’ பரிசோதகர் உள்ளே நுழைந்தால் இந்த ஆசாமி தானாகவே எழுந்து உட்கார்ந்து விடுகிறான்! அப்புறம் நாம் அந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டால் போச்சு! அதுவரை கூட நம்மால் நிற்க முடியாதா, என்ன?’’

சிறிது நேரத்திற்கெல்லாம் அதே பெட்டிக்குள் இன்னும் மூவர் ஏறினர். ரயில் கூவிற்று. பத்மநாப ஐயர் தமக்குப் பின்னால் ஏறின மூவருக்கு முன் முந்திக் கொள்ளப் பார்த்தார். அப்பொழுது அவருக்குப் பின்னால் ஏறியவர்கள் வந்து, அந்தப் படுத்திருந்த ஆசாமியை எழுப்பினர். எழுந்த ஆசாமி, ‘‘என்னுங்க! எவ்வளவு நேரமா இந்த இடத்தைப் பிடிக்க வச்சிக்கிட்டு இருக்கிறதுங்கோ?’’ என்று சொல்லிக்கொண்டே ரயிலை விட்டு இறங்கி நடந்தான்!

பிரமாதம்? கீழே விழுந்த பெண்ணைத் தூக்கிவிட்டால் அதில் என்ன தப்பு?" என்று சேர்ந்திருந்தவாறு உமாவுக்குத் தோன்றினாலும், "அவன் ஏன் வந்து நாற்காலி முனையில் உட்கார்ந்தான்? உட்காருவதற்கு வேறு இடமா இல்லை?" என்ற நினைவு மட்டும் அவனை வருத்திக் கொண்டேயிருந்தது.

இதற்குள் உமா வந்திருப்பதையறிந்து யாரோ அவனை உள்ளே அழைத்துச் சென்றார்கள். ஆனால் ரொம்ப நாழியாகி விட்டபடியால் அவனுடன் நின்று பேசுவதற்குச் சந்திரசேகரனுக்கு நேரமில்லை. முதல் அங்கத்தைப் பற்றிய சில விஷயங்களைச் சரிபார்க்க வேண்டியிருந்தது. ஆகையால் மேடை மீது இரண்டு திரைகளுக்கு மிடையில் போடப்பட்டிருந்த சோபாவில் போய் உட்கார்ந்தான். தங்கமணியும் அவன் பின் சென்றுவிட்டாள். உமாவுக்கு என்னமோ போலிருந்தது. கணவன் தங்கமணியுடன் பேசியதும், அவளுக்கு உதவி செய்ததும்கூட அவளுக்குப் பெரிதாகப் படவில்லை. ஆனால் அவளைக் கவனிக்காமல் சேகரன் உள்ளே போனதுதான் அவளுடைய மனதை ஏதோ செய்தது. நேராகப் போய் நாடகம் பார்க்க வந்திருந்தவர்களுடன் அவள் சபையில் உட்கார்ந்து கொண்டாள்.

நாடகம் நடந்துகொண்டே செல்லச் செல்ல உமாவுக்குத் தலை சுற்றியது.

இரண்டில் ஒன்றுதான்!



கிழவனார் (அரைச் செவிடு):—என் தம்பி! இந்தப் பசுவை 5 வருஷத்துக்கு முந்தி 46 ரூபாய்க்கு வாங்கினதாகச் சொல்லுகிறாயா, இல்லே, 5 ரூபாய்க்கு 46 வருஷத்துக்கு முந்தி வாங்கினதாகச் சொல்லுகிறாயா?

சொல்லி வைத்தாற்போல் சம்பவங்கள் இப்படி ஏன் ஒன்றன் பின் ஒன்றாக நடந்தன என்பது அவளுக்கே புரியவில்லை. மேடை மீது தங்கமணியும் சந்திரசேகரனும் தோன்றி நடிக்கும் போதெல்லாம் சபையி லிருந்தவர்கள் கை கொட்டித் தமது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். உண்மையில் அவர்கள் நடித்ததும் அவ்வளவு நன்றாகத்தான் இருந்தது.

"நடிப்பு என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்! உண்மையில் நடக்கிறதைப்போல் அல்லவா இருக்கிறது?" என்று யாரோ அவளுக்குப் பின்னால் சொன்னார்கள்.

சட்டென்று திரும்பிப் பார்க்க வேண்டுமென்ற உணர்ச்சி உமாவுக்குப் பொங்கி எழுந்தது. ஆனால் அவள் திரும்பிப் பார்க்கவில்லை. அவளுக்குப் பயமாக இருந்தது.

"ஆமாம், ஏன் இருக்காது? சந்திரசேகரன் ஒரு வாலிபன்தான். தங்கமணியும் ஒரு அழகிதானே? இரண்டு பேருக்கும் உண்மையாகவே பற்றுதல் ஏற்படாவிட்டால் இவ்வளவு அற்புதமாக நடிக்க வருமா?" என்று பின்னால் யாரோ தொடர்ந்து வியாக்யானம் செய்தார்கள்.

உமாவின் உடல் தளிர்போல் ஆடியது; உள்ளம் துடித்தது. அவள் திரும்பிப் பார்க்க வில்லை — பயமாக இருந்தது.

நாடகம் முடியும் வரையில்கூட உமாவினால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. அவள் நல்ல வேளையாகச் சற்று ஓரமாகவே உட்கார்ந்திருந்ததால் சிறிது முன்னதாகவே வெளியேறி விட்டாள். அவள் வீட்டுக்குப் போய்ப் படுக்கையில் விழுந்ததும் தன்னையும் மீறி 'ஹோ' வென்று அழுது விட்டாள். "பெண்கள் விடுதலையாவது! கிடுதலையாவது! அவர்களுக்குக் கெட்ட பெயர் வருவதுதான் மிச்சம். தங்கமணியைப் பற்றி அவர்கள் எல்லாம் என்னென்ன சொல்லுகிறார்கள்! அவர் வந்தவுடனே பெண்கள் விடுதலையைப் பற்றி நான் சொன்னதெல்லாம் தப்பு என்று சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்" என்று எண்ணினாள். அப்படியும் அவள் மனம் சமாதானமடையவில்லை. நிமிஷத்துக்கு ஒரு தடவை

சொல்கிறாய்?" என்று கேட்டான் சேகரன் ஒரு நாள்.

"நீங்கள் ஒப்புக் கொண்டால் மட்டும் போதுமா?" என்றாள் உமா.

"ஊரில் எல்லோரும் ஒப்புக்கொள்ள வில்லை என்றால் நான் என்ன செய்யட்டும்?"

"என்ன செய்கிறது என்று கேட்கிறீர்கள்? நீங்கள் ஸ்திரீகளுக்குச் சமத்துவம் கொடுக்கவேண்டு மென்று அடுப்பங்கரையில் உட்கார்ந்து கொண்டு சொன்னால் போதாது. நீங்கள் அங்கங்கே அதைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்ய வேண்டும். உங்களுக்குத்தான் நாடகம் கிடகம் எழுதத் தெரியுமென்று பிரமாதப் படுத்துகிறீர்களே? பெண்கள் விடுதலையைப் பற்றி ஒரு நாடகம் ஏன் எழுதி நடிக்கக் கூடாது? உங்கள் வெட்டிப் பேச்சைக் கண்டு நான் ஏமாந்து விடுவே னென்று நினைக்கிறீர்களா?"

உண்மையில், சந்திரசேகரன் தன் மனைவியைத் திருப்தி செய்வதற்காகவாவது, ஒரு நாடகம் எழுதித் தீர்த்துவிடுவதென்று தீர்மானித்தான். அவ்வாறே ஒரு நாடகம் எழுதி அதற்குப் 'பெண் விடுதலை' என்று பெயரும் கொடுத்தான்.

அவன் ஆபீஸிலிருக்கும் உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் சேர்ந்து அந்த நாடகத்தை நடிப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் அவன் ஆபீசைச் சேர்ந்த ஸ்ரீமதி தங்கமணியும் பங்கெடுத்துக்கொண்டிருந்தாள். சந்திரசேகரன் கதா நாயகனாகவும், தங்கமணி கதா நாயகியாகவும் அதில் நடிக்க ஏற்பாடாகி யிருந்தது. கடைசி நிமிஷம்வரையில் இதை உமாவுக்குத் தெரியாமல் வைத்திருந்து, அவளை நாடகத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டு மென்று சேகரன் எண்ணியிருந்தான். ஆனால் பேச்சு வார்த்தைகளுக் கிடையில் அது எப்படியோ வாய் தவறி வந்து விட்டது.

சாயங்காலம் நாடகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் ஜரூராக நடந்தன. உமா சற்று முன்பாகவே வந்து விட்டாள். உள்ளே வேஷம் போட்டுக்கொள்ளும் அறையில் அவள் எட்டிப் பார்த்தாள். அங்கே அவள் பார்த்த காட்சி அவளைத் தூக்கி வாரிப் போட்டது. சந்திரசேகரன் உட்கார்ந்து, முகத்தில் அரிதாரத்தைப் பூசிக்கொண்டிருந்தான். தங்கமணி அவன் உட்கார்ந்திருந்த நாற்காலியின் கைப் பிடிமேல் உட்கார்ந்து கொண்டு என்னமோ சொல்லிக்கொண்டிருந்தாள். கண்ணாடியில் பார்த்து முகத்தைச் 'சீர் திருத்தி'க் கொண்டிருந்த சந்திர சேகரன் எதையோ எடுப்பதற்கு திடீரென்று எழுந்திருக்கவே, நாற்காலி ஒரு பக்கமாகச் சாய்ந்தது. தங்க மணியும் கீழே விழுந்து விட்டாள்.

நல்ல வேளை; சேகரன் விழா விட்டாலும் விழுந்தவளைக் கை கொடுத்துத் தூக்கவேண்டிய நிலைமை அவனுக்கு ஏற்பட்டு விட்டது. ஏற்கெனவே அவனுக்கு மற்றப் பெண்களுடன் பழகுவ தென்றால் கூச்சம். வேண்டா வெறுப்புடன்தான் அவர்களுடன் பேசுவான். தங்கமணி நாற்காலியின் கைப் பிடி மேல் வந்து உட்கார்ந்தபோதுகூட 'ஐயோ! கஷ்ட காலமே' என்று இருந்தான்.

இதைப் போன்ற மனப்பான்மை தன்னுடைய கணவனிடத்தில் இருக்கிற தென்பது உமாவுக்கும் தெரியும். ஆகையால் அவன் தங்க மணியின் கையைப் பிடித்துத் தூக்கி விட்டதைப் பார்த்த போது அவளையும் அறியாமலே அவள் உள்ளத்தில் ஒருவித நடுக்கம் உண்டாயிற்று, "சீ! இது என்ன



சண்டமாக அரைமணி நேரம் வெளுத்து வாங்கி விட்டான். அவளுக்கு ஆங்கிலத்தி லிருக்கும் தேர்ந்த அறிவையும், சொற்களைக் கையாளும் வேகத்தையும் பார்த்த போது, யாருக்குப் பரிசு கொடுப்பதென்ற சந்தேகம் அதிகாரிகளுக்கு உண்டாகி விட்டது. கடைசியில் சந்திரசேகரனுக்கும் உமாவுக்கும் பரிசைச் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் அப்படிச் சிரமப்பட் டிருக்க வேண்டியதில்லை. ஏனெனில் அடுத்த வருஷமே அந்தப் பரிசுகளை ஒன்று கூட்டி, சந்திரசேகரனும் உமாவும் அவைகளை ஒரே பீரோவில் தான் வைத்தார்கள். இப்படி அவர்கள் செய்யப் போகிறார்கள் என்பது அவர்களுடைய கல்யாணத்துக்கு முன்னமேயே தெரிந்திருந்தால் பரிசு கொடுத்தவர்களுக்கு மிகவும் சௌகர்யமாகப் போயிருக்குமல்லவா?

* * *

பெண்கள் விடுதலையைப் பற்றிப் பேசுவதென்றால் உமாவுக்கு அலாதி ஆனந்தந்தான்! அதைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் அவளுக்குத் தலைகால் தெரியாது. பாரதியார் நூல்கள் எல்லாம் அவளுக்கு மனப்பாடம். ஏதாவது பேசினால், பாரதியார் சொல்லி யிருக்கிறார் என்று ஆரம்பித்து விடுவாள்.

சந்திரசேகரனுக்குப் பெண்கள் விடுதலை விஷயத்தில் உண்மையான சிரத்தை இருந்த போதிலும், வேண்டுமென்றே உமா சொல்வதையெல்லாம் எதிர்த்துப் பேசுவான். "ஆமாம்; புருஷர்கள் அப்படித்தான் எதிர்ப்பீர்கள். உங்கள் கெட்ட எண்ணம் இப்பொழுதுதானா தெரியும்? உலகம் தோன்றின நாளாக இப்படித்தானே ஸ்திரீகளை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கிறீர்கள்!" என்பாள் உமா.

"இன்றைக்கு வேண்டியது பெண்கள் விடுதலை அல்ல; ஆண்கள் விடுதலைதான். பெண்களிடமிருந்து நாங்கள் கொஞ்சம் விடுதலை பெறுவதற்காக 'ஆண் விடுதலை இயக்கம்' ஒன்று ஆரம்பிக்கப் போகிறோம்" என்பான் சேகரன்.

முதலில் உமாவுக்குக் கோபம் வரும்; பிறகு அவள் முகத்தில் புன்னகை மலரும்.

"உமா! அதைப் போன்ற நிலைமை வந்ததனால்தான் நீட்ஷே என்ற பெரியவர்கூட பெண்களிடம் ஆண்கள் ரொம்ப ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்று எழுதி யிருக்கிறார்" என்பான் சேகரன் மேலும்.



"நீட்ஷே கிடக்கிறான்! இப்படியெல்லாம் பைத்தியக்காரத்தனமாக உளறினதால்தான், கடைசியில் அவன் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் உயிரை விட்டான்" என்பாள் உமா.

சந்திரசேகரன் தன்னைப் பொறுத்த வரை உமாவுக்குப் பூரண விடுதலை கொடுக்காமல் இல்லை. அவளுடைய அழகு ததும்பும் முகத்தைக் கண்ட போதும், பேசும் ஆர்வத்தைக் கேட்ட போதும், இவைகளுக்காகவாவது உமாவின் அபிப்பிராயங்களை ஒப்புக்கொள்ளத் தயாராயிருந்தான்.

"உமா! நான்தான் நீ சொல்கிறதை யெல்லாம் ஒப்புக் கொள்கிறேனே, இனிமேல் என்னை என்ன செய்யச்



விடுதலை வேண்டாம்

பி.வி.சுப்ரமண்யம்

சந்திரசேகரனுக்கு உமாவின் செய்கை ரொம்ப வேடிக்கையாக இருந்தது. அன்றைக்கு அதிகாலையி லிருந்து அவன் சட்டப் புஸ்தகங்களை வைத்துக் கொண்டு, மறு நாள் கேஸுக்கு ஏதோ தயார் செய்து கொண்டிருந்த அவ்வளவு நேரமும் உமா பத்திரிகையை வைத்துக் கொண்டு "தேவை" என்ற இடத்தில் எதையோ வரி வரியாகப் படித்துக் கொண்டிருந்தாள். திடீர் திடீரென்று புன்சிரிப்பு மலர்ந்து மறையும் அவளுடைய முகத்தைப் பார்த்ததும் படித்துக் கொண்டிருந்த புஸ்தகத்தில் சேகரன் கவனம் செல்லவில்லை. அதைத் தூக்கித் 'தொப்'பென்று விட்டெறிந்தான். உமா தலை எடுத்துக் கணவனைப் பார்த்தாள். "யானை வேண்டுமா, யானை?" என்று கேட்டாள்.

சந்திரசேகரன் ஒன்றும் புரியாமல் "என்ன, அது?" என்றான்.

மாமனார் வீட்டிலிருந்து இது வரையில் அவனுக்கு எவ்வளவோ விபத்துகள் வந்து விட்டன. அத்துடன் யானையிலும் இரண்டு வாங்கி அனுப்பி விட்டாரோ என்று பயந்தான் சந்திரசேகரன்.

"யானை வேண்டுமா?" என்றாள் உமா, மறுபடியும்.

"ஏது?"

உமா பத்திரிகையை எடுத்துக் காட்டி "இதோ பாருங்கள். இப்பொழுதெல்லாம் அடிக்கடி 'யானைகள் விற்பனைக்குத் தயார்' என்று பத்திரிகைகளில் விளம்பரங்கள் வருகின்றன. சௌகரியமாக வருகிறபோதே அவைகளில் காலைந்து வாங்கிப் போட்டால், பிறகு வேண்டியபோது அவை இருந்தாலும் இறந்தாலும் ஆயிரம் பொன் வீதம் விற்கலாமல்லவா?" என்று கேட்டாள்.

அதற்குச் சந்திரசேகரன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்று அவளுக்குத் தெரியும். ஆகையால் இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டு, அவன் எட்டப் போய் நின்று, தெருப் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். சந்திரசேகரன் விடவில்லை. அவளுடைய காதுக்கு அருகில் போய் நின்றுகொண்டு, செவிடனுக்குச் சொல்வதைப் போல், "நீ பெண்கள் உரிமைக்காகப் பரிந்து பேசுகிறதும் யானை வாங்கி வளர்க்கிற கதையாகத்தான் இருக்கும் போலிருக்கிறது!" என்று இரைந்தான். குபுக்கென்று இரண்டு கைகளையும் எடுத்துவிட்டு உமா சிரித்துக் கொண்டே, மாடிப் படிகளில் இறங்கி ஓடினாள்.

* * *

சட்ட கலாசாலையிலிருந்து சந்திரசேகரன் வெளியே வந்து இரண்டு வருஷங்களே ஆகியிருந்தன. என்றாலும் கூட, அப்பொழுதே சகோதரத் தொழிலாளிகளுக்கு அவனிடத்தில் அபார மதிப்பு ஏற்பட்டிருந்தது.

அவன் சட்ட கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த பொழுது, பிரசங்கப் போட்டியொன்று நடைபெற்றது. மாகாணத்திலுள்ள எல்லாக் கலாசாலை மாணவர்களும் அதில் கலந்து கொண்டார்கள். சட்ட கலாசாலையிலிருந்து சந்திர சேகரனையே அதிகாரிகள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருந்தனர். சாதாரணமாக, அவன் நாவன்மையை அறிந்தவர்கள் பரிசு அவனுக்கே வரும் என்று தீர்மானித்திருந்தார்கள். ஆனால் போட்டியின்போது அவர்களையெல்லாம் திடுக்கிட வைக்கும் சம்பவம் ஒன்று நேர்ந்தது. அதுதான் உமாவின் பிரசங்கம்.

உமா மேடையின் மீது வந்து நின்றதும் அவள் இவ்வளவு பிரமாதமாகப் பேசப் போகிறாள் என்று யாரும் எண்ணவில்லை. மற்றக் கலாசாலைப் பெண்களைப் போல் மேடை மீது வந்து நின்றதும் பயந்து, ஏதாவது 'கெக்கே பிக்கே' என்று இரண்டு வார்த்தை உளறி விட்டுப் போய் விடுவாள் என்றுதான் எதிர்பார்த்தனர். ஆனால், உமா பெண்கள் விடுதலையைப் பற்றிச் சண்டப் பிர

Times have changed !



TIME-KEEPERS


in Shakespeare's Day



காலம் மாறிவிட்டது !

ஷேக்ஸ்பியர் காலத்துக் கெடிகாரங்களும் தற்காலத்துக் கெடிகாரங்களும்


& present day



எக்ஸ்ட்ரா "F"

18 காரட் முழு தங்கம், கனமான கேஸ் ரூ. 280

அராபிக் அல்லது கியூ ஸ்டைல் டயல் ஒரே விலை.



எக்ஸ்ட்ரா "H"

18 காரட் முழு தங்கம், கனமான கேஸ் ரூ. 345

ஷேக்ஸ்பியர் காலத்தில் ஸ்க்ரூ கிடையாது. கெடிகாரத்தின் ஓட்டம், ஊசிகள், ஆணிகள் இவைகளால் பிணைக்கப் பட்டிருந்தது. வெளி கட்டுக்கு விகாரமாய் கையினால் செய்யப் பட்டிருந்தது. பாலன்ஸ் ஸ்பிரிங்கிற்குப் பதிலாக தடித்த ரோமம் உபயோகத்திலிருந்தது. இன்று கெடிகாரங்கள், ஆராய்ச்சியாளர்களின் 400 வருஷத்திய விவேகம், அனுபவம் மற்றும் திறமையினால் அமைக்கப்பட்டுள்ளன. வெஸ்ட் எண்டு கெடிகாரம் சென்ற காலத்திலும், நிகழ் காலத்திலுமுள்ள எல்லா, நல்ல அம்சங்களையும் ஒருங்கே பெற்றிருக்கிறது. வேண்டுவோருக்கு கேட்லாக் இலவசம்.

சாமான்கள் சரிவர வராததின் காரணத்தால் விளம்பரப் படுத்திய எல்லாவிதமான மாடல்களையும் சப்ளை செய்ய இயலாது. ஸ்டாக் உள்ளவரை கூடுமான வரையில் ஆர்டர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

வெஸ்ட் எண்டு வாட்ச் கோ.,

பம்பாய் — கல்கத்தா

West End Watch Co

Bombay — **Calcutta**



காலக் கண்காட்சி

ஜப்பானியர் முறை

ஹாங்காங் வசப்பட்டவுடன் உலகமே கண்டும், கேட்டுமறியாத ஒரு கொடுமை முறையை ஜப்பானியர் கையாள ஆரம்பித்தனர். ஒவ்வொரு நாளும் காலையில் ஆதரவற்ற 400 பேர்களை 'ஜெஸ்லே பார்க்'குக்கு கொண்டுவந்து ஜப்பானிய உத்யோகஸ்தர்கள் வாள்கொண்டு தலைகளை வீசிக் கொன்றனர். உத்யோகஸ்தர்களுக்கு இது நல்ல பயிற்சியாம்! போர்களும் படைகளுக்கு ஒரு வேடிக்கையாம்! இந்த மிருகத்தனம், ரத்த வெறி, ஈவிரக்கமற்ற கொடூரம் ஜப்பானில் அபூர்வமல்ல. சர்வ சாதாரணமானது. ஜப்பானியன் வேறு காட்டானைக் கொல்வது கொடுமையல்ல என்று எண்ணுகிறான். ஏனெனில் அவன் மதிப்பில் மற்றவரெல்லாம் அவனுக்குக் கீழானவர்களே.

அப்படிப்பட்ட நாட்டை இந்தியா என் செய்யவேண்டும்? ஒரே ஒரு பதில் தானுண்டு. ஜப்பானியர்களை அழிக்கவேண்டும். கொடூர செயல் புரியும் மிருக சாதியை அடியோடு அறுக்கவேண்டும். நிபந்தனையற்ற சரணாகதியடையும்படி செய்யவேண்டும். அதற்கு குறைவாக எது செய்தாலும் போதாது.



காலக்ஷேபம்

ஒன்றுமில்லையா ?

பரதேசி :—ஐயா, கொஞ்சம் சாப்பாடு போடுங்கோ !

வீட்டுக்காரர் :—கொஞ்சம் உட்கார்ந்திரு; சாப்பாடு ஆன பிறகு போடறேன்.

பரதேசி :—சாப்பாடு ஆன பிறகு என்னத்தைச் சாமி போடுவீங்க ?

—ஐ. எம். ஜஹாருல்லா.

●

தெரியாத காரணம்

டாக்டர் :—குளிர் ஜுரம் வந்த பொழுது பல் நடுக்கம் ஏற்பட்டதா ?

நோயாளி :—தெரியாது, டாக்டர் !

டாக்டர் :—தெரியாதா, ஏன் ?

நோயாளி :—குளிர் ஜுரம் வந்த பொழுது, நான் பல் ஸெட்டைக் கழற்றி மேஜை மீதல்லவா வைத்திருந்தேன் !

—என். நாராயணன்.

●

தெளரவந்தான்

நண்பன் :—நான் வேலையைக் கட்டாயத்தின் பேரில்தான் ராஜிநாமாச் செய்தேன்.

மற்றவர் :—யாருடைய கட்டாயத்தின் பேரில் ?

நண்பன் :—ஏன், முதலாளியினுடைய கட்டாயத்தின் பேரில்தான்.

—பி. துரைசாமி.

●

கேட்டதும், கொடுத்ததும்

ஹோட்டலில் சாப்பிட வந்தவர் :—(ஸர்வரைப் பார்த்து) ஏன் ஸார், தோசை ஒரே மாவாக இருக்கிறதே !

ஸர்வர் :—மாத் தோசை தானே கேட்டீர்கள் !

—ஆர். வெங்கடசுப்பிரமணியன்.

சில்லறை மணியார்டர்

நாட்டுப்புறத்தான் (இருபது ரூபாய்க்குச் சில்லறை வைத்துக்கொண்டு மணியார்டர் குமாஸ்தாவிடம்) :— இந்த இருபது ரூபாயை மணியார்டரிலே அனுப்பணுங்க.

மணியார்டர் குமாஸ்தா :—இது என்ன, பூராவும் சில்லறையாக் கொடுக்கிறே ?


நாட்டுப்புறத்தான் :—என் மகன் இருக்கற ஊரிலே ரொம்பவும் சில்லறைக் கஷ்டமுங்க. அவனுக்குத்தானுங்க இதை அனுப்பணும்.

—ஆர். எஸ். கிருஷ்ணன்.

●

காரணம்

ராமய்யர் ஒரு மேஜையை வீட்டிற்கு வெளியே தள்ளிக் கொண்டிருக்கிறார். அவரால் முடியவில்லை. உதவிக்குக் காரியஸ்தனை அழைத்துக் கொள்கிறார். அப்பொழுதும் முடியவில்லை.



ராமய்யர் :—என்ன மேஜை இது ! இரண்டு பேர் சேர்ந்து கூட வெளியே தள்ள முடியவில்லையே !

காரியஸ்தன் :—அடாடா ! இவ்வளவு நேரம் வெளியேயா தள்ளினீர்கள் ?

——இ. சாந்தா பாய்.

ஆசைப்படும். அதனால்தான் அணில் நரியாரை விருந்துக்கு அழைக்கவில்லை.

"நாழிகை ஆகிவிட்டது. சாப்பிட உட்காரலாமே!" என்றது அணில். மற்றப் பிராணிகள் யாவும் சந்தோஷமாக விருந்து சாப்பிட ஆரம்பித்தன. அணில் "நல்ல பாட்டாக ஒரு பாட்டு யாராவது பாடுங்கள்" என்று சொல்ல, நாய் "நான் பாடட்டுமா?" என்று கேட்டது. ஆனால் அதற்கு ஒருவரும் பதில் சொல்லாததினால் நாய் பேசாமலிருந்து விட்டது. உடனே முயலின் மனைவி பாடிற்று. பாட்டு மிகவும் நன்றாக இருந்ததால் எல்லாப் பிராணிகளும் "பேஷ்! பேஷ்!" என்று கை கொட்டி ஆரவாரித்தன.




அச்சமயத்தில் நரி அவ்வழியே வந்தது. "இதென்ன அணில் வீட்டில் ஏதோ பாட்டுச் சத்தம் கேட்கிறது?" என்று உற்றுக் கவனித்தது. "ஓஹோ! என்னைக் கூப்பிடாமல் அணில் விருந்து கொடுக்கிறதா?" என்று அது கோபமடைந்தது. "வந்த விருந்தினரையும் அணிலையும் அவமானப் படுத்துகிறேன், பார்!" என்று சொல்லிக் கொண்டே நரி மரத்தில் சாத்தியிருந்த ஏணியை மரத்தை விட்டு அப்புறப் படுத்தியது. மரத்திலிருந்து இறங்கத் தெரியாமல் விழிக்கப்போகும் விருந்தினரை வேடிக்கை பார்க்க நரி மெதுவாக இருட்டில் மரத்திற்குப் பக்கத்தில் பதுங்கிக் கொண்டது.



நரி எதிர்பார்த்தபடியே விருந்தினர் யாவும் ஏணியைக் காணாமல் எப்படிக் கீழே இறங்குவது என்று தவித்தன. நரி "வேணும், வேணும்" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டே சந்தோஷமாக உட்கார்ந்து கொண்டிருந்தது. அப்பொழுது முள்ளம் பன்றி "ஏணி எங்கே போகும்?" என்று ஒரு மரக் கிளையிலிருந்து எட்டிப் பார்க்கவே, கால் தவறி தடால் என்று கீழே விழுந்தது. எங்கே விழுந்தது என்று நினைக்கிறீர்கள்? சத்தம் போடாமல் கீழே உட்கார்ந்திருந்த நரி மீதுதான்! எதிர்பாராமல் தன் மீது முள்ளம் பன்றி விழவே, நரி வலி பொறுக்க முடியாமல் 'வான் வான்' என்று கத்திக்கொண்டே ஓட்டம் எடுத்தது. விருந்தினரை அவமானப்படுத்த வேண்டுமென்றிருந்த நரி தான் அவமானப்படவே, வெட்கப்பட்டுக் கொண்டு அந்தக் காட்டை விட்டு வேறு காட்டுக்குச் சென்று விட்டது.

விழுந்த முள்ளம் பன்றி சிரித்துக் கொண்டே ஏணியை மறுபடியும் மரத்தின் மீது வைத்தது. முயல்களும், நாயும் சௌக்கியமாகக் கீழே இறங்கி விடு வந்து சேர்ந்தன. தான் நடத்திய விருந்தின் காரணமாக ஒரு பொல்லாத நரி காட்டை விட்டுச் சென்றதைப் பற்றி அணிலுக்கு மிகவும் சந்தோஷமாகத்தானிருந்தது.



அணிலின் விருந்து



ராஜி

"நாழிகை ஆகிவிட்டது. இன்னும் நீ புடவை கட்டிக் கொள்ளவில்லையா?" என்று கோபித்துக் கொண்டது முயல். "அப்படி ஒன்றும் நாழிகை ஆகவில்லை. அடுத்த வீட்டு முள்ளம் பன்றி இன்னும் போகவில்லை. எதிர் வீட்டு நாயும் இன்னும் கிளம்பவில்லை. அதுவுமல்லாமல் தான் போகும் பொழுது நாய் நம்மையும் அழைத்துப் போவதாகச் சொல்லியிருக்கிறது" என்று பதில் சொல்லிற்று முயலின் மனைவி. "அது சரி. அணிலின் சுபாவம் உனக்குத் தெரியுமே. சரியான காலத்தில் வராவிட்டால் அதற்குக் கோபம் வரும். அதோ நாயாரும் வந்துவிட்டார்! வா, சீக்கிரம் ஏணியை எடுத்துக்கொண்டு புறப்படலாம்" என்றது முயல்.

அணிலின் வீட்டில் விருந்து நடக்கும் போதெல்லாம் மரத்தில் ஏற முடியாத பிராணிகள் ஏணிகளைத் தூக்கிக் கொண்டு போவது காட்டில் வழக்கம். அவ் வழக்கப்படி முயல்கள் ஏணியை எடுத்துச் செல்லத் தயாராக இருந்தன. அப்பொழுது அங்கு வந்த நாய் "நானும் ஏணியை எடுத்துப் போக உதவி செய்கிறேன்" என்று ஏணியின் ஒரு முனையைப் பிடித்துக் கொண்டது. அங்கே அப்பொழுது வந்த முள்ளம் பன்றியும் ஏணியின் மற்றொரு முனையைப் பிடித்துக் கொண்டது.

ஏணியை மெதுவாக எடுத்துக் கொண்டு அணில் வசிக்கும் மரத்திற்கு சுமார் இரவு எட்டு மணிக்கு அவை வந்து சேர்ந்தன. முயல்கள், முள்ளம் பன்றி, நாய் ஒவ்வொன்றும் மெதுவாக ஏணியின் வழியாக மரத்தில் ஏறின. இவை வருவதை அறிந்த அணில் தான் உட்கார்ந்திருந்த கிளையிலிருந்து ஓடோடியும் வந்து அவற்றை வரவேற்று உபசரித்தது. விருந்தினர் அணில் அணிந்திருந்த உடுப்புகளைப் பற்றிப் புகழ்ந்து பேசினர்.

"நீங்கள் வரும்பொழுது நரியார் உங்களைப் பார்க்கவில்லையே?" என்று மிகவும் ஆவலுடன் கேட்டது அணில். "நாங்கள் வந்தது நரியாருக்குத் தெரியவே தெரியாது" என்றது முயல். நரியாரைக் கண்டால் காட்டிலுள்ள மற்றைய பிராணிகளுக்குப் பிடிக்கிறதே இல்லை. ஏனென்றால், நரிக்கு நல்ல காரியம் செய்யவே பிடிக்காது. பிறருக்கு ஏதாவது கெடுதல் செய்யவே அது



"சக்கரவர்த்தியாகிய தந்தை சத்திய தர்மத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று கட்டளை யிட்டார்; நானும் அப்படியே பாதுகாத்துப் புகழைச் சூடிக் கொண்டேன்" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் இதெல்லாம் என்ன சொல்?

'அடரும் செல்வம்
அளித்தவன் ஆணையால்

படரும் நல்லறம்
பாலித்(து), இரவியிற்ச்

சுடரும் மெய்ப்புகழ்
சூடினென் என்பதேன்?—

இடர்உ னக்குஇழைத்
தேன்நெடு நாள்' என்றான்

[அடரும் செல்வம் அளித்தவன் ஆணையால்: மிகுதியான செல்வத்தைப் (ராஜ்யத்தை) பாதுகாத்த தசரத சக்கரவர்த்தியின் கட்டளையால்: படரும் நல்லறம் பாலித்து; விரிவாக நின்று விளங்கும் சத்திய தர்மத்தைப் பரிபாலித்து: இரவியிற் சுடரும் மெய்ப்புகழ் சூடினன்: சூரியனைப்போல் பிரகாசிக்கும் புகழைச் சூடிக்கொண்டேன் என்று சொல்லுவதெல்லாம் ஒன்றுமில்லை; உண்மை என்னவென்றால், இடர் உனக்கு இழைத்தேன் நெடு நாள்: துன்பத்தை யல்லவா உனக்குச் செய்திருக்கிறேன், அதுவும் பதினாலு வருஷத்துக்கு!

லக்ஷ்மணனுடன் நெடுநாள் பழகியவன்தான் ராமன். தம்பியின் அன்பு இன்னதென்று நன்றாய்த் தெரியும்.

பர்ணசாலையைப் பார்த்த மாத்திரத்தில் அருமைத் தம்பியின் அன்புதான் மனதைக் கொள்ளை கொள்ளுகிறது. அந்த அன்போடு பக்கத்தில் நின்ற சீதையின் அன்பும் சேர்ந்து கொள்ளுகிறது. எவ்வளவு இயல்பான நிகழ்ச்சி இது!

பர்ண சாலையின் வேலைப் பாட்டை உற்று நோக்கிய பிறகு தம்பியின் கைத் திறன் தெளிவாய் விளங்குகிறது. ஒரே வியப்பு! அதை அவனிடம் கொட்டுகிறான் — ஆனந்தக் கண்ணீருடன்.

கடைசியாக என்ன நேருகிறது பாருங்கள். எக்களிப்பு வியப்பு ஆனந்தம் எல்லாம் நெஞ்சை விட்டுப் போய்விடுகின்றன. துயரந்தான் மிஞ்சுகிறது!

நீங்கள் எங்கே?



பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்.

(இந்தியாவில் 1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது)

தலைமை ஆபீஸ் :: மதுரை

தீ விபத்து சம்பந்தமான

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 15,00,000
இன்ஷ்யூரன்ஸ் நிதிகள்	....	ரூ. 23,94,606
	●	ரூ. 38,94,606

கிளை ஆபீஸ்கள் :

பம்பாய் :

லாயிட்ஸ் பாங்க் பில்டிங்,
ஹார்ன்பி ரோடு, பம்பாய்.

அகமதாபாத் :

1761, காந்தி ரோடு,
அகமதாபாத்.

●

பிரதம ஏஜண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி,
மதுரை, தூத்துக்குடி,
அம்பாசமுத்திரம்.

K. M. S. லெக்ஷ்மணய்யர் & சன்ஸ்,
மதுரை, திண்டிவனம், மதராஸ், நகரி, பெஜவாடா,
காக்கினாடா & விஜயநகரம்.

●

விவரங்களுக்கு மேலே கண்ட எந்த ஆபீசுக்கும் எழுதலாம்.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

57. மிஞ்சி நின்றது துயரம்

சித்திரகூட பர்வதத்தில், ஆற்றின் கரையில் ராமன் லக்ஷ்மணன் சீதை ஆகிய மூவரும் கைகளைக் குவித்துக் கண்களையுங் குவித்த வண்ணமாய்த் தியான நிலையில் நின்றிருந்ததைப் பார்த்தோம். அந்தி நேரமும் நீங்கி விட்டது. ஜாகைக்குப் போக வேண்டிய வேளை வந்தது.

ஜாகை தயாராய் இருக்கிறது என்று லக்ஷ்மணன் சொன்னதும் ராமன், சீதையுடனேயே நடந்து ஜாகைக்கு வந்து சேர்ந்தான்.

பர்ணசாலையை லக்ஷ்மணன் எப்படிச் செய்தான் என்பதைக் கவனிப்போம். நீண்ட மூங்கில்களை எடுத்து வெட்டித் தூண்களாக நிறுத்தினான். மேல் மட்டம் பார்த்துக் கொண்டான். விட்டத்தையும் தூண்கள் மேல் வைத்தான். மூக்குச் சட்டங்களை அமைத்துக் கைகளையும் ஏற்றிக் குறுக்காக வரிச்சுகளையுங் கட்டி விட்டான்.

வரிச்சுகளுக்குமேல் வெள்ளி போல் பளப் பளப்பான தேக்கிலைகளைப் பரப்பினான். நயமான வேலை இது. அதன் மேல் புல்லை வேய்ந்து விட்டான். பிறகு கீழே இறங்கி நட்டு வைத்த தூண்களுக் கிடையே சர்க்கழிகளை அடை சுவராக நெருக்கி அமைத்தான். சர்க்கழிகளின் மேல் களிமண்ணை உள்ளும் புறமுமாக அப்பித் தண்ணீர் விட்டுத் தீற்றி ஒழுங்கு செய்தான். இந்த இடம் ராமனுக்கு. அதை யொட்டியே சீதைக்கு ஒரு தனியான இடம். அதில் கொஞ்சம் அலங்காரம் அதிகம். சுவர்மேல் செம்மண் கொண்டு தீற்றிய அழகான பட்டைகள். உள்ச் சுவரிலோ ஆற்றில் கிடந்த பல வர்ணக் கற்களையும் சிப்பிகளையுங் கொண்டு கோலங்களாகப் பதித்து அலங்கரித்திருந்தான்.

இப்படி யெல்லாம் சமைத்த சாலையில் பொன்னிறமான சீதையும் நீலநிறமான தானுமாய்க் குடிபுகுந்தான் ராமன்.

இன்னணம் இளையவன்
இழைத்த சாலையில்
பொன்னிறத் திருவொடும்
குடிபுக் கான்அரோ.—



நன்நெடும் திசைமுகன்
அகத்தும், நம்மனோர்க்(கு)

உன்னரும் உயிருள்ளும்
ஒக்க வைகுவான்.

[இன்னணம் இளையவன் இழைத்த சாலை யில்: இப்படி லக்ஷ்மணன் அமைத்த சாலை யில்; பொன்னிறத் திருவொடும் குடிபுக்கான் அரோ: பொன்னிறமான லக்ஷ்மியோடும் பிரவேசித்தான், யார்: சிருஷ்டிகளை யெல்லாம் செய்து கொண்டிருக்கிறவனான பிரம்மனது உள்ளத்திலும், நமக்கு இன்னதென்று அறிய முடியாத உயிர்க் குள்ளேயும் தங்கி நிற்கும் பரம்பொருளாகிய ராமன். நன் நெடும் திசைமுகன்: அழகாய் நாலா திசையும் பார்த்து நிறைந்துள்ள சிருஷ்டி சக்தியாகிய பிரமனது; அகத்தும்: உள்ளத் திலும்; எல்லா சக்திகளுக்கும் மூலமா யிருப்பது பரம்பொருளின் சக்திதானே. உன்னரும்: என்ன தன்மையில் இருக்கிறது என்று அறியமுடியாத.]

பர்ண சாலையைப் பார்த்த அளவில் என்று மில்லாத ஆனந்தம் புகுந்து விட்டது ராமனது இதயத்தில். மனதுக் குள்ளேயே சொல்லிக் கொள்ளுகிறான்:

மேவு கானம்
மிதிலையர் கோன்மகள்

பூவின் மெல்லிய
பாதமும் போந்தன;

தாவில் எம்பிகை
சாலை சமைத்தன; —

யாவை யாதும்
இலார்க்(கு)இயைய யாதவே!

[மேவு கானம்: ஏதோ அடைய வேண்டும் என்று தேர்ந்த காட்டின்வழியாக; மிதிலையர் கோன்மகள்: சாதாரணமான பெண்ணு, அல்ல: ஒரு மன்னனுடைய மகள்; பூவின் மெல்லிய பாதமும் போந்தன: பூவைவிட மெல்லிய பாதங்கள் அல்லவா நடந்தன; தாவில் எம்பிகை சாலை சமைத்தன: ஒப்பற்ற லக்ஷ்மணனது கை அல்லவா சாலையைக் கட்டியது; யாது மிலார்க்கு இயையாத யாவை: யாதொரு பொருளு மில்லாத ஆண்டியாகிய எனக்குக் கூடாதது என்னதான் இருக்கிறது! என்னைவிட பாக்கியசாலி இந்த உலகத்தில் யார்!]



தன்னைவிட பாக்கிய சாலி யாருமில்லை என்று எக்களிப் போடு சிந்தித்துக் கொண்டிருக் கிறான் ராமன். சிறிது நேரங் கழித்து லக்ஷ்மணனைப் பார்த் தான்; பேசுகிறான்.

என்று சிந்தித்(து)
இளையவற் பார்த்(து), 'இரு
குன்று போலக்
குவவிய தோளினாய்!
என்று கற்றனை
நீயிது போல்?' என்றான், —
துன்று தாமரைக்
கண்பனி சோர்கின்றான்

[இளையவற் பார்த்து: தம்பியா கிய லக்ஷ்மணனைப் பார்த்து; இரு குன்று போலக் குவவிய தோளி னாய்: இரண்டு மலை போன்ற திரண்ட தோளை யுடையவனே; என்று கற்றனை நீ இதுபோல் என்றான்: இப்படி சாலை சமைக்க எப்போது அப்பா, கற்றுக் கொண் டாய் என்றான்; துன்று தாமரைக் கண்பனி சோர்கின்றான்: முதிர்ந்த தாமரை போன்ற கண்ணிலிருந்து கண்ணீர் சொரிந்த வண்ணமாய்.]

ராமனது உள்ளத்தில் ஆனந் தம் பொங்கியது. அது எப்படி மாறுகிறது என்று பார்ப்போம்.

பேசிக் கொள்ளவில்லையென்று நாம் சத்தியம் செய்யமுடியாது.

கடைசியாகச் சிவகாமியிடம் விடை பெற்றுக் கொள்வதற்கும் குமார சக்கரவர்த்தி அந்தக் கண்களின் பாஷையையே கையாண்டார்.

நரசிம்மரின் குதிரை சிறிது தூரம் சென்றதும், அவர் தமது தலையை மட்டும் திருப்பிச் சிவகாமி ஆவல் ததும்பப் பார்த்துக்கொண்டு நிற்பதைக் கவனித்தார். உடனே தம் கையிலிருந்த வேலை உயரத் தூக்கிப் பிடித்துப் புன்னகை புரிந்தார். மறுகணத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டு, குதிரையைத் தட்டி விட்டார்.

குமார சக்கரவர்த்தியின் சமிக்ஞையைச் சிவகாமி அறிந்து கொண்டாள். வேலின் மீது ஆணை வைத்துத் தான் வாக்குறுதி கேட்ட விஷயத்தை அவர் ஞாபகப்படுத்தி, அதன் பொருட்டுத் தாம் மறுபடியும் விரைவில் வருவதாகக் குறிப்பிடுகிறார் என்பதையும் தெரிந்து கொண்டாள். அப்போது சிவகாமியின் பவழ நிற இதழ்கள் மாதுளை மொட்டின் இதழ் விரிவது போல் விரிந்தன; முத்தன்ன பற்கள் வெளியே எட்டிப் பார்த்தன. அவளுடைய கண்களும், கண்ணிமைகளும், புருவங்களும் கலீரென்று சிரித்தன.

குதிரைகள் காட்டுக்குள் மறையும் வரைக்கும் சிவகாமி இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். குதிரைகள் மறைந்த சிறிது நேரத்துக்கெல்லாம் இராஜ பரிவாரத்தின் ஜயகோஷம் தூரத்திலே கேட்டது. பிறகுதான் அவள் வீட்டுக்குள் செல்ல யத்தனித்தாள்.

நரசிம்மர் வேலைத் தூக்கிப் பிடித்து சமிக்ஞை செய்ததை நினைத்து உவகை கொண்ட சிவகாமிக்கு இன்னொரு விஷயம் ஞாபகம் வந்தது. அந்த வேலுக்கு உடையவனான இளைஞன் எங்கே? நரசிம்மர் பல முறை இந்தக் கேள்வியைக் கண்களின் மூலமாகவே கேட்டதையும், தான் மறுமொழி சொல்ல முடியாமல் விழித்ததையும் அவள் நினைத்துக் கொண்டாள். அந்தக் கேள்வியை நரசிம்மர் பகிரங்கமாகக் கேட்க முடியாமலிருந்ததையும் அதனால் அவர் அடைந்த அவஸ்தையையும் நினைத்தபோது சிவகாமிக்குச் சிரிப்பு பொங்கிக்கொண்டு வந்தது. தனக்கு முன்னால் வீட்டுக்குள் போய் விட்ட ஆயனரிடம் அந்த வீர வாலிபனைப் பற்றிக் கேட்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவள் தனக்குத் தானே சிரித்த வண்ணமாய் உள்ளே புகுந்த போது, புத்தர் சிலைக்கு அருகாமையில் ஆயனர் செல்வதையும், அந்தச் சிலைக்குப் பின்னாலிருந்து புத்த பிக்ஷுவும் அவருடன் வந்த இளைஞனும் திடீரென்று எழுந்து நிற்பதையும் கண்டாள். அப்போது சிவகாமிக்கு ஏற்பட்ட வியப்பையும் திகைப்பையும் சொல்ல இயலாது.



தண்டிக்க வேண்டும்......" என்று சொன்னபோது, ஆயனரின் முகத்தில் பெரும் கலவரம் காணப்பட்டது. சக்கரவர்த்தி அடுத்தாற்போல் கூறிய மொழிகள் அந்தக் கலவரத்தை ஒருவாறு நீக்கின.

"ஆமாம்; இங்கு வந்து விட்டு உடனே திரும்பவேண்டும் என்று எண்ணியிருந்த என்னை இத்தனை நேரம் இங்கே தங்கும்படி வைத்து விட்டீர் அல்லவா? அதனால் எவ்வளவு காரியங்கள் தடைப்பட்டு விட்டன? போகட்டும், இந்தத் தடவை உம்மை மன்னித்து விடுகிறேன்!" என்று கூறி ஹாஸ்ய நகைப்புடன் மகேந்திரர் வாசலை நோக்கி நடந்தார். மற்றவர்கள் அவரைத் தொடர்ந்து சென்றார்கள்.

வீட்டு வாசற் படியைத் தாண்டியதும் சக்கரவர்த்தி ஆயனரைத் திரும்பிப் பார்த்துக் கூறினார்:—"சிற்பியாரே! உம்முடைய சிற்பக் கோயிலுக்கு மீண்டும் நான் எப்போது வருவேனோ, தெரியாது. ஆனால் ஒன்று சொல்கிறேன். இந்தப் பூர்வீகமான பல்லவ சாம்ராஜ்யத்துக்கு ஒரு காலத்தில் அழிவு வந்தாலும் வரலாம்......"

"பெருமானே! ஒரு நாளும் இல்லை. அப்படிச் சொல்ல வேண்டாம்!" என்று ஆயனர் அலறினார்.

"கேளும், ஆயனரே! உலகத்தில் இதற்குமுன் எத்தனையோ சாம்ராஜ்யங்கள் இருந்திருக்கின்றன; மறைந்திருக்கின்றன. பாடலிபுத்திரம் என்ன, உஜ்ஜயினி என்ன, இவையெல்லாம் இப்போது இருந்த இடம் தெரியவில்லை. அதுபோல் இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்துக்கும் ஒரு நாள் முடிவு ஏற்படலாம். ஆனால், உம்முடைய கலா சாம்ராஜ்யத்துக்கு மட்டும் ஒரு காலத்திலும் அழிவு கிடையாது. தெய்வத் தமிழ் மொழியும், தமிழகமும் உள்ளவரையில் உம்முடைய கலா சாம்ராஜ்யமும் நிலை பெற்றிருக்கும்!"

அப்போது ஆயனர் உணர்ச்சி ததும்பிய குரலில், "பிரபு! என்னைப் போல் ஆயிரம் சிற்பிகள் தோன்றுவார்கள்; மறைவார்கள். இன்றைக்கு நூறு வருஷத்துக்குப் பிறகு எங்கள் பெயரெல்லாம் மறைந்து விடும். ஆனால், இந்த நாட்டில் சிற்ப, சித்திரக் கலைகள் உள்ளவரைக்கும், தங்களுடைய திருப்பெயரும் குமார சக்கரவர்த்தியின் பெயரும் சிரஞ்சீவியாக நிலைத்து நிற்கும்" என்றார்.

ஆஹா! அந்த மகா சிற்பியின் வாக்கு எவ்வளவு உண்மையானது! மாமல்லபுரத்தை ஒரு சொப்பன உலகமாகச் செய்த தமிழ்நாட்டு மகா சிற்பிகளின் பெயர்கள் உண்மையில் மறைந்துதான் போய் விட்டன! ஆனால், மகேந்திர பல்லவர், நரசிம்ம பல்லவரின் பெயர்கள் சரித்திரத்தில் இடம்பெற்று இன்றைக்கும் சிரஞ்சீவிப் பெயர்களாய் விளங்குகின்றன அல்லவா?

சக்கரவர்த்தியும் அவருடைய குமாரரும் தத்தம் குதிரைமீது ஏறிக்கொண்டார்கள். மகேந்திரர் குதிரை மேலிருந்தபடியே ஆயனரை மறுபடியும் நோக்கி, "பார்த்தீரா? வெகு முக்கியமான விஷயத்தை மறந்து விட்டேன். நான் வடக்கே கிளம்புமுன், மாமல்லபுரத்தில் நடக்க வேண்டிய வேலைகளைப் பற்றி ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும். நாளைப் பிற்பகல் நீர் துறைமுகத்துக்கு வர வேண்டும்" என்றார்.

"ஆக்ஞை, பிரபு; அப்படியே வந்து சேர்கிறேன்!" என்றார் ஆயனர்.

சக்கரவர்த்தியின் குதிரை கிளம்பிற்று. அதை முன்னால் விட்டுப் பின்னால் நரசிம்மரின் குதிரையும் புறப்பட்டது.

போகும் குதிரைகளைப் பார்த்துக் கொண்டு ஆயனரும் சிவகாமியும் வீட்டு வாசலில் நின்றார்கள்.

மகேந்திர பல்லவர் ஆயனர் வீட்டு வாசலுக்கு வந்ததிலிருந்து அவர் திரும்பிக் குதிரை மீதேறிய வரையில் அவரும் ஆயனருமே சம்பாஷணை நடத்தினார்களே தவிர, குமார நரசிம்மராவது, சிவகாமியாவது வாய் திறந்து ஒரு வார்த்தையாவது பேசவில்லை. ஆனால் அவர்கள் தங்களுக்குள்ளே கண்களின் மூலமாகச் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம்

வேலைகள் எனக்கு இருக்கின்றன. இருந்தாலும், இங்கு வந்து விட்டால் எல்லாம் மறந்து விடுகிறது. உமது புதிய சிலைகளைப் பார்த்துவிட்டுச் சீக்கிரம் கிளம்ப வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே, நடன அபிநயச் சிலைகள் வைத்திருந்த இடத்தை நோக்கி நடந்தார். ஆயனரும் சிவகாமியும் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

முன்னால் சென்ற மகேந்திர பல்லவர் புதிதாகச் செய்திருந்த நடனத் தோற்றச் சிலைகளைப் பார்த்துக் கொண்டே "இது கஜ ஹஸ்தம்" "இது அர்த்த சந்திர ஹஸ்தம்" என்று இவ்விதம் சொல்லிய வண்ணமாக நடந்து ஆயனர் கடைசியாகச் செய்து முடித்திருந்த சிலையண்டை போனதும், "ஆஹா!" என்று கூறி நின்றார். சற்று நேரம் அதை உற்றுப் பார்த்து விட்டு, "ஆயனரே! தொண்டை மண்டலத்திலுள்ள மகா சிற்பிகளுக்குள்ளே உமக்கு நிகரானவர் எவருமில்லை. ஆனால், நீர்கூட இத்தனை காலமும் இந்தச் சிலையைப் போல் ஜீவகளை பொருந்திய சிலையைச் செய்தது கிடையாது. ஆகா! இந்தச் சிலையின் முகத்திலேதான் எத்தகைய கனிவும் ஏக்கமும் காணப்படுகின்றன? அன்பிற்குரியவர் நெடுங்காலம் வராதபடியினால் ஏற்பட்ட இருதய தாபத்தை இந்தச் சிலையின் முகமும், மற்ற அங்கங்களின் நெளிந்த தோற்றமும் எவ்வளவு நன்றாய் வெளியிடுகின்றன? கண்களும், கண்ணிமைகளும், புருவங்களும் கூட அல்லவா நம்மோடு வார்த்தையாடுகின்றன? ஆயனரே! சிவகாமியின் அரங்கேற்றத்துக்குப் பிற்பாடு இந்தச் சிலையை நீர் பூர்த்தி செய்திருக்கிறீர், இல்லையா?" என்று கேட்டார்.

"ஆம், பெருமானே! இன்று காலையில் தான் பூர்த்தி செய்தேன். சிவகாமி பெரிய மனது செய்து இன்றைக்கு எனக்காக மறுபடியும் ஆடி அபிநயம் பிடித்தாள்" என்று ஆயனர் கூறிப் பெருமையுடன் மகளைத் திரும்பிப் பார்த்தார்.

மகேந்திரரும் மந்தஹாஸத்துடன் சிவகாமியைப் பார்த்துவிட்டு, "ஆயனரே! பரதசாஸ்திரத்தைத் தொகுத்து எழுதிய முனிவர் 'ஏழு வகைப் புருவ அபிநயம்' என்று தானே சொல்லியிருக்கிறார்? அவர் நமது சிவகாமியின் நடனத்தைப் பார்த்திருந்தால், புருவ அபிநயனம் ஏழு வகை அல்ல, எழுநூறு வகை என்று உணர்ந்து அவ்விதமே சாஸ்திரத்திலும் எழுதியிருப்பார்!" என்றார்.

இவ்விதம் உல்லாஸமாகப் பேசிக் கொண்டு சென்ற சக்கரவர்த்தியின் பார்வை சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு பிரம்மாண்டமான புத்தர் சிலையின்மீது விழுந்தது.

"ஆயனரே! புத்த பகவானுடைய சிலை இன்னும் பூர்த்தியாகவில்லையா!" என்று கேட்டார்.

அப்போது ஆயனர் தயங்கி நின்றதோடு அவருடைய மறுமொழியிலும் ஒருவிதக் குழப்பம் வெளியாயிற்று.

"ஆமாம், ... இல்லை, ... இன்னும் கொஞ்சம் வேலை இருக்கிறது. ஆனால், நடராஜ மூர்த்தியின் தாண்டவ நடனத்தைப் பூர்த்தி செய்து விட்டேன். அதோ பாருங்கள்!" என்றார்.

ஆயனரின் தயக்கத்தையும் குழப்பத்தையும் மகேந்திரர் கவனித்தாரோ, என்னவோ தெரியாது. அவரும் அவ்விடத்திலேயே நின்று புத்த விக்கிரகத்தைப் பார்த்த வண்ணம், "ஆஹா! கருணாமூர்த்தியான புத்த பகவான் பூவுலகத்திலிருந்து ஹிம்சையையும் யுத்தத்தையும் அடியோடு ஒழிக்க முயன்றார். அவருடைய உபதேசத்தை இந்த உலகிலுள்ள எல்லா மன்னர்களும் கேட்டு நடந்தால், எவ்வளவு நன்றாயிருக்கும்? இந்த பூமியே சுவர்க்கமாகிவிடாதா? அவருடைய உபதேசத்தைக் கேட்டு நடந்த புண்ணிய புருஷர் மௌரிய வம்சத்து அசோக சக்கரவர்த்தி ஒருவர்தான். அப்புறம் இந்தப் பரத கண்டத்தில் அத்தகைய அஹிம்சா மூர்த்தியான அரசர் தோன்றவில்லை!" என்றார்.

ஆயனர் மறுமொழி கூறாமல் மௌனமாய் நிற்கவே, சக்கரவர்த்தி, "நல்லது, சிற்பியாரே! உம்மை இராஜாங்க விரோதியாகப் பாவித்து நியாயமாகத்

யாரும் இவ்வளவு அபூர்வமாக ஆடியதில்லை; ஆடப்போவதுமில்லை. வருங்காலத்தில் எது எப்படியானாலும், சிவகாமியின் நடனக் கலைப்பயிற்சி மட்டும் தடைப்படக் கூடாது. அவளுக்கு எவ்விதத்திலும் உற்சாகக் குறைவு நேரிடாமல் நீர் பார்த்துக் கொள்ள வேண்டும்!" என்றார்.

ஆயனர், "பெருமானே! ரஸிக சிகாமணியாகிய தாங்களும், குமார சக்கரவர்த்தியும் உற்சாகப்படுத்துவதற்கு இருக்கும்போது சிவகாமிக்கு உற்சாகக் குறைவு ஏன் ஏற்படப் போகிறது? எனக்குத்தான் என்ன கவலை?" என்று சொல்ல, மகேந்திர பல்லவர் கூறுவார்:—"அப்படியில்லை, ஆயனரே! இந்த யுத்தம் காரணமாக நானும் குமார சக்கரவர்த்தியும் சில காலம் இவ்விடம் வர முடியாமலும் உங்களைப் பார்க்க முடியாமலும் போகலாம். அதனாலே உங்கள் இருவருடைய கலைப் பணிக்கும் எவ்விதக் குந்தகமும் ஏற்படக் கூடாது. சிவகாமி புத்த பிக்ஷுணியாக விரும்புவதாகச் சற்று முன்னால் சொன்னீரல்லவா? ஒரு விதத்தில் அது பொருத்தமானதுதான். சிவகாமி சாதாரணமான பெண் அல்ல; மற்றப் பெண்களைப்போல் உரிய பருவத்தில் இல்வாழ்க்கையை மேற்கொண்டு அற்ப சுகங்களில் காலங் கழிக்கப் பிறந்தவள் அல்ல; பெண்ணாய்ப் பிறந்தவர்களில் லட்சத்திலே, கோடியிலே ஒருவருக்குத்தான் இப்பேர்ப்பட்ட கலை உணர்ச்சி ஏற்படும்; அதைப் போற்றி வளர்க்க வேண்டும். சம்சார வாழ்க்கையைப் பொறுத்த வரையில் சிவகாமி தன்னை பிக்ஷுணியாகவே நினைத்துக் கொள்ளலாம். தெய்விகமான நடனக் கலைக்கே அவள் தன்னை அர்ப்பணம் செய்து விடவேண்டும்."

இந்த மொழிகளைக் கூறியபோது மகேந்திர பல்லவரின் மனதிலே என்ன இருந்தது என்பது நமக்குத் தெரியாது. ஒரு வேளை சிவகாமி — நரசிம்மர் இவர்களுடைய மனோ நிலையைப்பற்றி அவருடைய உள்ளத்தில் ஏதேனும் ஐயம் தோன்றியிருக்குமோ, அதனாலே தான் இவ்விதம் சொன்னாரோ என்பதையும் நாம் அறியோம்.


ஆனால், அவருடைய மொழிகள் அங்கிருந்த மூன்று பேருடைய உள்ளங்களிலும் வெவ்வேறு விதமான உணர்ச்சிகளை உண்டாக்கியிருக்க வேண்டுமென்பது அவர்களுடைய முகபாவ மாறுதல்களிலிருந்து நன்கு தெரிந்தது.

ஆயனர் தமது உள்ளக் கிளர்ச்சியை வார்த்தைகளினாலே வெளியிட்டார்:—"பிரபு! என்னுடைய மனதில் உள்ளதை அப்படியே தாங்கள் கூறிவிட்டீர்கள். சிவகாமி சாதாரணப் பெண் அல்ல என்பது உண்மைதான். இல்வாழ்க்கையை மேற்கொண்டு பிள்ளை குட்டிகளைப் பெற்று வளர்ப்பதற்கு எத்தனையோ லட்சம் பேர் இருக்கிறார்கள். இந்த அபூர்வமான தெய்வக் கலையைப் பயின்று வளர்ப்பதற்கு சிவகாமியைப்போல் எத்தனை பேர் உண்டு?" — இவ்விதம் ஆயனர் சொல்லிக் கொண்டே சிவகாமியைத் திரும்பிப் பார்த்து, "சக்கரவர்த்தியின் பொன் மொழிகளைக் கேட்டாயா, குழந்தாய்?" என்றார்.

சிவகாமியின் முகமானது அச்சமயம் கீழ்த்தரச் சிற்பி சமைத்த உணர்ச்சியற்ற கற் சிலையின் முகம்போல் இருந்தது. எத்தனையோ விதவிதமான உணர்ச்சிகளை யெல்லாம் முகபாவத்திலே, கண்ணிமைப்பிலே, இதழ்களின் மடிப்பிலே அற்புதமாக வெளியிடும் ஆற்றல் பெற்றிருந்த சிவகாமி, அச்சமயம் தன் சொந்த உள்ள உணர்ச்சியை முகம் வெளியிடாதபடி செய்வதில் அபூர்வத் திறமை காட்டினாள் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால், நரசிம்ம வர்மர் அபிநயக் கலையில் தேர்ச்சி பெறாதவரானபடியால், சக்கரவர்த்தியின் வார்த்தைகளைக் கேட்டதும் அவருடைய முகம் சிவந்தது; இதழ்கள் துடித்தன. மற்றவர்கள் கவனியாத வண்ணம் உடனே அவர் வேறு பக்கம் திரும்பி, பக்கத்தில் இருந்த சிலைகளையும் சித்திரங்களையும் பார்ப்பவர்போல் அவ்விடமிருந்து பெயர்ந்து அப்பால் சென்றார்.

சக்கரவர்த்தியும் தாம் இத்தனை நேரம் வீற்றிருந்த கல் சிம்மாசனத்திலிருந்து எழுந்து, "சிற்பியாரே! எவ்வளவோ முக்கியமான அவசர



வேண்டி யிருக்கும். ஆனால், ஒரு விஷயம் சொல்கிறேன். நமது ராஜ்யத்தில் சளுக்கர் படையெடுப்பினால் எனக்கு உண்டாகும் கோபத்தைக் காட்டிலும், அதனால் சிவகாமியின் அரங்கேற்றம் தடைப்பட்டதுதான் அதிகக் கோபத்தை உண்டாக்குகிறது. இந்தக் குற்றத்துக்குத் தகுந்த தண்டனையை அவர்கள் அநுபவித்தே தீரவேண்டும்!" என்றார்.

இதைக் கேட்ட ஆயனர் பெருமையினால் பூரித்தவராய், அருகில் தலை குனிந்த வண்ணம் நின்ற சிவகாமியை அருமையுடன் நோக்கினார்.

சக்கரவர்த்தி மேலும் கூறுவார் :--

"ஆமாம்; ஆயனரே! அரங்கேற்றத்

தன்று நான் என்ன வெல்லாமோ திட்டம் போட்டிருந்தேன். ருத்ராச்சாரியரைக் கொண்டு, சிவகாமிக்கு வாழ்த்துரை கூறச்சொல்ல வேண்டுமென்று எண்ணியிருந்தேன். அதெல்லாம் ஒன்றும் முடியாமல் போயிற்று. சபையிலே செய்திருக்க வேண்டிய சன்மானத்தை இங்கேயாவது செய்யலாமென்று உத்தேசித்திருக்கிறேன். அதற்கு ஆட்சேபனை ஒன்றுமில்லையே?" — இவ்விதம் சொல்லிக் கொண்டு சக்கரவர்த்தி தம் கையிலிருந்த இரத்தினப் பையிலிருந்து அழகான இரட்டை வட முத்து மாலையை எடுத்தார்.

அப்போது ஆயனர், "பெருமானே! தங்கள் திருக்கரத்தினால் கொடுக்கும்போது எங்கே கொடுத்தால் என்ன? சிவகாமி! உன் பாக்கியமே பாக்கியம்! இந்த பரத கண்டத்திற்குள்ளே சகல கலைகளின் நுட்பங்களையும் நன்குணர்ந்த ரஸிக சிரேஷ்டர் எவரோ, அப்பேர்ப்பட்ட விசித்திர சித்த மகாப்பிரபு உன்னுடைய கலைத் திறமையை மெச்சி உனக்குச் சன்மானம் அளிக்கப் போகிறார். இதைக் காட்டிலும் நீ அடையக் கூடிய பாக்கியம் வேறில்லை" என்று கூறி சமிக்ஞை செய்யவும், சிவகாமி முன்னால் வந்து சக்கரவர்த்தியைப் பணிவுடன் வணங்கிக் கரங்களை நீட்டினாள்.

மகேந்திரர் முத்து மாலையை எடுத்துச் சிவகாமியின் நீட்டிய கரங்களில் வைத்தபோது...

அடாடா! — இதென்ன மீண்டும் அபசகுனம்! — மாலை அவள் கையிலிருந்து நழுவிக் கீழே தரையில் விழுந்து விட்டதே!

இதைக் கண்ட ஆயனரின் முகம் சட்டென்று சுருங்கியது. மகேந்திர பல்லவருடைய திடசித்தங்கூடச் சிறிது கலங்கி விட்டதாக அவருடைய புருவங்களின் நெரிப்பிலிருந்து தெரிந்தது.

முத்து மாலை கையிலிருந்து நழுவி விழுந்தபோது சிவகாமியின் மனத்திலும் ஏதேனும் துணுக்கம் ஏற்பட்டிருக்குமோ என்னமோ, நமக்குத் தெரியாது. ஆனால், அடுத்த கணத்தில் அவளுடைய முகம் மலர்ந்ததைப் பார்த்தால் அவளுடைய உள்ளமும் மகிழ்ந்திருக்க வேண்டுமென்று நிச்சயமாய்த் தெரிந்தது.

ஏனெனில், கீழே விழுந்த முத்து மாலையை அந்தக் கணத்திலேயே சக்கரவர்த்திக்கு அருகில் நின்ற குமார சக்கரவர்த்தி சட்டென்று குனிந்து எடுத்தார். எடுத்த மாலையைச் சிவகாமியின் நீட்டிய கரங்களில் அவர் வைக்க, சிவகாமி அதை ஆர்வத்துடன் வாங்கிக் கண்களில் ஒத்திக் கொண்டு கழுத்திலும் அணிந்து கொண்டாள். அந்த முத்து மாலைப் பரிசைக் குமார சக்கரவர்த்தியின் கையினால் பெற்றுக் கொள்ள நேர்ந்தது பற்றிச் சிவகாமியின் உள்ளத்தில் பொங்கிய உவகையானது முகத்திலும் பிரதிபலித்ததில் வியப்பில்லையல்லவா?

பத்தொன்பதாம் அத்தியாயம்

புத்தர் சிலை

நழுவித் தரையில் விழுந்த முத்து மாலையைக் குமார சக்கரவர்த்தி குனிந்து எடுத்துக் கொடுத்ததையும், அதைச் சிவகாமி முகமலர்ச்சியுடன் வாங்கி அணிந்து கொண்டதையும் பார்த்த ஆயனரின் முகமானது சுருக்கம் நீங்கிப் பிரகாசம் அடைந்தது.

சக்கரவர்த்தி இதையெல்லாம் கவனியாததுபோல் கவனித்தவராய், ஆயனரைப் பார்த்து "மகா சிற்பியாரே! இந்த முத்து மாலையைப்போல் எவ்வளவோ உயர்ந்த பரிசுகளையெல்லாம் உமது புதல்வி வருங்காலத்தில் அடையப் போகிறாள். இந்தப் பல்லவ ராஜ்யத்துக்கே அவளால் புகழும் மகிமையும் ஏற்படப் போகின்றன. லயத்திலும் அபிநயத்திலும் சிவகாமி அடைந்திருக்கும் தேர்ச்சியைப்போல் ஒரு வேளை சாக்ஷாத் நடராஜ மூர்த்தியுடன் நடனப் போட்டியிட்ட சிவகாமி அம்மை அடைந்திருக்கலாம். மற்றப்படி மனித கணத்தில் வேறு

ஆயனர் உண்மையான ஆத்திரத்துடன் கூறினார்.

"அந்தத் துணிச்சலுக்குத் தகுந்த தண்டனையை அவர்கள் அடைவார்கள், ஆயனரே! பல வருஷ காலமாகப் பல்லவ ராஜ்யத்துக்குள் பகைவர் படைகள் நுழைந்ததில்லை. நான் போர்க்களத்தைக் கண்ணால் காண வேண்டும் என்பதற்காக என் தந்தை என்னை இலங்கையில் நடந்த போருக்கு அனுப்பி வைத்தார். ஆனால், நரசிம்மனுக்கோ இங்கேயே போர்க்களத்தைப் பார்க்கும்படியான பாக்கியம் நேரிட்டிருக்கிறது" என்று கூறிச் சக்கரவர்த்தி தம் பக்கத்தில் அடக்கத்துடன் நின்ற நரசிம்மரைப் பெருமையுடன் நோக்கினார்.



அப்போது ஆயனர், "எனக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. குமார சக்கரவர்த்தி போர்க்களத்துக்குப் போவதற்கு முன்னால், பகைவர்கள் திரும்பி ஓடிப் போவார்கள்" என்றார்.

இதைக் கேட்ட மகேந்திரர் புன்னகை புரிந்து, "அப்படிச் சொல்வதற்கில்லை, ஆயனரே! அவ்வளவு அற்பமான விஷயமாயிருந்தால் நான் அரங்கேற்றத்தின் நடுவில் எழுந்து போயிருக்க மாட்டேன். பெரிய மகா யுத்தந்தான் வந்திருக்கிறது. வாதாபி அரசன் புலிகேசி பெரும் படைகளைத் திரட்டிக்கொண்டு படையெடுத்து வருகிறான். நாமும் பெரும் பலம் திரட்டிக் . கடும் போர் செய்ய

மகா ராஜாதி ராஜ பூமண்டலாதிபதி திரிபுவன சக்கரவர்த்தி மத்த விலாஸ விசித்திர சித்த ஸங்கீர்ண ஜாதிப் பிரகரண சித்திரக்காரப் புலி குணபர மகேந்திர பல்லவச் சக்கரவர்த்தியை இத்தனை நேரம் ஆயனர் வீட்டு வாசலிலேயே நிறுத்தி வைத்து விட்டதற்காக வாசகர்களின் மன்னிப்பைக் கோருகிறோம். அவ்விதம் நாம் அந்த மன்னர் பெருமானை நிறுத்தி வைத்து விட்ட போதிலும், ஆயனச் சிற்பியார் அவரை வரவேற்று உபசரிப்பதில் சிறிதும் காலந் தாழ்த்து விடவில்லை. சக்கரவர்த்தியின் வருகையை அறிவித்த பேரிகை ஒலி முதலிய சப்தங்கள் வெகு தூரத்தில் கேட்டபோதே ஆயனர் பரபரப்புடன் வீட்டு வாசலுக்கு வந்து வரவேற்க ஆயத்தமாக நின்று கொண்டிருந்தார். தமக்குப் பின்னால் சிவகாமி வந்து வாசற்படிக்கு அருகில் நின்றதைக் கூட அவர் கவனிக்கவில்லை.

சக்கரவர்த்தியும் அவருடைய திருக்குமாரரும் பரிவாரங்களை யெல்லாம் சற்றுத் தூரத்திலேயே நிறுத்தி விட்டு ஆயனர் வீட்டண்டை வந்து சேர்ந்தார்கள். குதிரையிலிருந்து இறங்கும்போதே சக்கரவர்த்திப் பெருமான், "ஆயனரே! அன்றிரவு சுகமாக வந்து சேர்ந்தீர்களா? சிவகாமி சௌக்கியமா?" என்று கேட்டுக் கொண்டே இறங்கினார்.

ஆயனர் முன்னால் ஓர் அடி சென்று கும்பிட்டு, "ஆகா! சுகமாக வந்து சேர்ந்தோம், பெருமானே! குழந்தை தான் மூன்று நாளாக அவ்வளவு சௌக்கியமில்லாம லிருந்தாள்......" என்பதற்குள், மகேந்திர பல்லவர், "அப்படியா? இப்போது எப்படி இருக்கிறாள்?" என்று கவலைக் குரலில் கேட்டார்.

"இன்று சற்றுப் பாதகமில்லை. குழந்தை தோட்டத்துக்குப் போயிருக்கிறாள். இதோ அழைத்து வரச் சொல்கிறேன். உள்ளே எழுந்தருள வேண்டும்" என்றார் ஆயனர்.

"சிவகாமி அதோ இருக்கிறாளே, ஆயனரே!" என்று சக்கரவர்த்தி சொல்லவும், ஆயனர் திரும்பிப் பார்த்து, "ஓஹோ! வந்துவிட்டாயா, அம்மா!" என்றார்.

எல்லாரும் வீட்டுக்குள் சென்றார்கள். சக்கரவர்த்தி வரும்போது அமர்வதற்காக வென்றே ஆயனர் ஓர் அழகிய கல் சிம்மாசனத்தை அமைத்திருந்தார். அந்த சிம்மாசனத்தில் மகேந்திரர் அமர்ந்ததும், ஆயனர் சிவகாமிக்குச் சமிக்ஞை செய்ய அவள் அருகில் நெருங்கி வந்து சக்கரவர்த்திக்கு நமஸ்கரித்தாள்.

அப்போது ஆயனர், "பெருமானே! அரங்கேற்றம் நடுவில் தடைப்பட்ட காரணத்தினால் குழந்தை உற்சாக மிழந்திருக்கிறாள். அவளுடைய சௌக்கியக் குறைவுக்கு அதுதான் காரணம். ரஸிக சிரோமணியான தாங்கள் தான் அவளுக்கு ஆசி கூறி உற்சாகப்படுத்த வேண்டும்" என்றார்.

"ஆயனரே! உமது குமாரி அன்றைக்கு நடனமாடியதாகவே எனக்குத் தோன்றவில்லை. நடனக் கலையே ஓர் உருவம் எடுத்துவந்து ஆடியதாகவே தோன்றியது. சிவகாமி சின்னஞ் சிறு பெண்ணாயிருந்த காலத்திலிருந்து அவள் இங்கே ஆடுவதை நான் பார்த்து வந்திருக்கிறேன். அந்தச் சிவகாமி தானா இவள் என்று எனக்குச் சந்தேகமே வந்து விட்டது!" என்றார் மகேந்திரர்.

"பெருமானே! சங்கீரண ஜாதி தாளத்தை உபயோகப்படுத்தி ஓர் ஆட்டம் கற்பித்திருந்தேன். அரங்கேற்றம் தடைப்பட்டதால் அதை ஆட முடியாமல் போய்விட்டது" என்று ஆயனர் ஏமாற்றமான குரலில் கூறினார்.

"ஆம்; ஆம்! இன்னும் என்ன வெல்லாமோ விந்தைகள் வரப்போகின்றன என்று எனக்குத் தெரிந்துதானிருந்தது. நடுவில் எழுந்து போக நேர்ந்ததில் எனக்கு ஏற்பட்ட வருத்தத்தைச் சொல்லி முடியாது. அவ்வளவு முக்கியமான செய்தியா யிராவிட்டால் போயிருக்க மாட்டேன்" என்றார் ரஸிக சிரோமணியான சக்கரவர்த்தி.

"நானும் கேள்விப்பட்டேன், பிரபு! நமது ராஜ்யத்திற்குள்ளே அன்னியர்கள் படையெடுத்து வந்திருக்கிறார்களாமே? என்ன தைரியம், என்ன துணிச்சல் அவர்களுக்கு?" என்று

பொருட்டுக் காஞ்சி நகரில் வந்து மொய்த்தவண்ண மிருந்தார்கள்.

வட நாட்டில் உஜ்ஜயினி நகரத்தில் ஐந்நூறு வருஷங்களுக்கு முன் அரசு செலுத்திக் காளிதாஸன் முதலிய மகா கவிகளை ஆதரித்த சந்திர குப்த விக்ரமாதித்யருக்குப் பிறகு, பண்டிதர்களுக்கும் கவிகளுக்கும் கற்பக விருட்சமாக விளங்கியவர் காஞ்சி மகேந்திர சக்கரவர்த்திதான் என்பது எங்கெங்கும் பரவி யிருந்தது.

சித்திரம், சிற்பம் ஆதிய கலைகளில் சக்கரவர்த்தி கொண்டிருந்த ஆர்வத்தைக் குறித்து முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். மேற்படி கலைகளில் அவர் ஆர்வங் கொண்டிருந்ததோடல்லாமல் அவற்றை நன்ருகப் பயின்று அந்தந்தக் கலையில் வல்லவர்களா யிருந்த கலைவாணர்கள் எல்லாம் பார்த்துப் பிரமிக்கும்படியான தேர்ச்சி பெற்றிருந்தார்.

இந்த நாளைப் போலவே அக்காலத்திலும் பட்டங்களின் மேல் பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் மிகுந்த பிரேமை இருந்தது. எனவே, அந்தந்தக் கலைகளில் வல்லவர்கள் மகா சபைகூடி மகேந்திர சக்கரவர்த்திக்குப் பலவிதப் பட்டங்களை வழங்கி யிருந்தார்கள்.

சிற்பத் துறையில் மகேந்திரரின் அதிசயமான கற்பனைத் திறனைக் கண்டு வியந்து, சிற்ப சாஸ்திர பண்டிதர்கள் அவருக்கு "விசித்திர சித்தர்" என்ற பட்டத்தை வழங்கி யிருந்தார்கள். அவ்விதமே சித்திரக் கலை வல்லவர்களிடம் "சித்திரக்காரப் புலி" என்னும் பட்டத்தைச் சக்கரவர்த்தி பெற்றிருந்தார்.

"மத்த விலாஸப் பிரகஸனம்" என்னும் ஹாஸ்ய நாடகத்தை வடமொழியில் இயற்றி "மத்த விலாஸர்" என்னும் பட்டத்தை அவர் அடைந்திருந்தார்.

சங்கீத சாஸ்திரத்தைக் கரை கண்டிருந்த ருத்ராச்சாரியாரிடம் அவர் சங்கீதக் கலை பயின்று, ஏழு நரம்புகள் உடைய "பரிவாதினி" என்னும் வீணையை அபூர்வமாய்க் கையாளும் திறமை பெற்றிருந்தார். சங்கீதத்தில் அதுவரையில் நாலு வகைத் தாள ஜாதிகள்தான் இருந்து வந்தன. ஐந்தாவதாக, "ஸங்கீரண ஜாதி" தாளத்தை மகேந்திரர் புதிதாகக் கண்டு பிடித்த காரணத்தினால் "ஸங்கீரண ஜாதிப் பிரகாரர்" என்ற பட்டம் அவருக்கு அளிக்கப் பட்டிருந்தது.

மகேந்திரர் இளம் பிராயத்தில் ஜைனமதத்தில் ஈடுபட்டிருந்து, பிற்காலத்தில் சிவ பக்திச் செல்வரான போதிலும், எந்த மதத்தையும் துவேஷிக்காதவராய், தமது சாம்ராஜ்யத்திலிருந்த சைவர், வைஷ்ணவர், புத்தர், சமணர், சாக்தர் ஆதிய சகல மதத்தினரையும் தர்மந் தவருமல் பரிபாலித்து வந்தபடியால், "குண பரர்" என்ற சிறப்புப் பெயரும் அவருக்கு ஏற்பட்டிருந்தது. திருவதிகை என்னும் ஸ்தலத்தில் அவருடைய கொடையினால் கட்டப் பெற்ற சிவாலயத்துக்குக் "குண பரீச்வரம்" என்ற பெயர் வழங்கப் பட்டிருந்தது.

மகேந்திர சக்கரவர்த்திக்கு முற்பட்ட சுமார் முந்நூறு வருஷ காலத்தில் வட நாட்டிலிருந்து பண்டிதர்களும், கவிகளும், ஜைன முனிவர்களும், புத்த பிக்ஷுக்களும் இடைவிடாமல் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்து காஞ்சி நகரில் வித்யாஸ்தானங்களை ஏற்படுத்தி வந்தார்கள். இக் காரணத்தினால், நமது வரலாறு நிகழ்ந்த காலத்தில் தமிழகத்தில் ஸம்ஸ்கிருதமும் பிராகிருதமும் பிரபல மடைந்து, தமிழ் மொழியை ஓரளவு மங்கச் செய்திருந்தனவென்பதையும் நேயர்கள் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

திருநாவுக்கரசர் முதலிய சைவ நாயன்மார்களும், பொய்கையார் முதலிய வைஷ்ணவ ஆழ்வார்களும் பக்திச் சுவை சொட்டும் பாடல்களைப் பொழிந்து தெய்வத் தமிழ்மொழியை மீண்டும் சிம்மாசனம் ஏறச் செய்த மகோன்னத காலம் தமிழகத்தில் அப்போதுதான் ஆரம்ப மாகி யிருந்தது.

மகேந்திர சக்கரவர்த்தியின் பட்டங்கள் பெரும்பாலும் வடமொழியில் இருப்பதின் காரணத்தை நேயர்கள் இப்போது ஊகித்து அறியலாம்.

இவ்வருஷத்திய

மஹோன்னத புராணப் படம்



ஜகதலப்ரதாபன்

வருகிறது!

சின்னப்பா · ஸரோஜினி · ஜீவரத்தினம்

ஸந்தானலக்ஷ்மி · கிருஷ்ணன் · மதுரம்...


டைரக்ஷன் · ஸ்ரீராமுலு நாயுடு · பக்ஷிராஜா பிலிம்ஸ் தயாரிப்பு

a NARAYANAN Co *Release*

P.S.M.& Co.



ஆனந்தமாக லிப்டன் தேனீர் அருந்தும்போது பொறுப்பற்ற பேச்சுகளைப் பேசாதீர்கள்.



சிவகாமியின் சபதம்

"கல்கி"

பதினெட்டாம் அத்தியாயம்

முத்து மாலை

பழந் தமிழ் நாட்டு மன்னர்களுக்குள்ளே ஒப்புயர்வு அற்றவரும், தமது இணையில்லாத புகழை என்றுமழியாத வண்ணம் கல்லிலே செதுக்கி வைத்தவருமான மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியை அன்றொரு நாள் இரவில், யுத்தச் செய்தி வந்த அவசரத்தில், மத யானையின் வெறியினால் நிகழ்ந்த தடபுடலுக்கு மத்தியில் நேயர்களுக்கு அறிமுகப் படுத்தினோம். இப்போதும் சக்கரவர்த்திக்கு அவசரமாக இருந்த போதிலும் நாம் சிறிது அவகாசம் ஏற்படுத்திக் கொண்டு அவருடைய தோற்றத்தையும், குணாதிசயங்களையும் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

எத்தகைய சாமான்ய குறுநில மன்னர்களையும் கூட அந்தந்த இராஜாங்கக் கவிகள் புத்தியிலே பிரகஸ்பதி என்றும், வித்தையிலே சரஸ்வதி என்றும், அழகிலே மன்மதன் என்றும், வீரத்திலே அர்ஜுனன் என்றும், கொடையிலே கர்ணன் என்றும் வர்ணிப்பதுண்டு. இந்த வர்ணனையெல்லாம் மகேந்திர சக்கரவர்த்தியின் விஷயத்தில் உண்மையிலேயே பொருந்துவதாயிருந்தது.

மகேந்திர வர்மர் ஆஜானுபாஹுவான தோற்றமுடையவர். அவருடைய கம்பீரமான முகத்தில் பல நூறு வருஷங்களாக வாழையடி வாழையாக வந்த இராஜ குலத்தின் வீரக் களையோடு சிறந்த கல்வி ஆராய்ச்சியினாலும் கலைப் பயிற்சியினாலும் ஏற்படும் வித்யா தேஜஸும் பிரகாசித்தது. காஞ்சி நகரின் பிரசித்தி பெற்ற பொற்கொல்லர்கள் சித்திர விசித்திர வேலைப்பாடுகளுடன் செய்த கிரீடம், குண்டலம், வாகு வலயம், வீரக்கழல் முதலிய ஆபரணங்களை அவர் தரித்திருந்தார். அவருடைய விசாலமான வீர லக்ஷ்மி குடி கொண்ட மார்பை விதவிதமான வர்ணங்களுடன் பிரகாசித்த நவரத்தின மாலைகள் அலங்கரித்தன. அபூர்வ அழகும் நயமும் மென்மையும் வாய்ந்த பட்டுப் பீதாம்பரங்களை உற்பத்தி செய்வதில் அந்த நாளிலேயே காஞ்சி நகரம் பெயர் பெற்றிருந்தது. அத்தகைய பீதாம்பரங்களை மகேந்திர சக்கரவர்த்தி அழகு பொருந்த அணியும்போது, அவை அதிக சோபை பெற்று விளங்கியதாக நெசவுத் தொழிற் கலைஞர்கள் பெருமிதத்துடன் கூறினார்கள்.

மகேந்திரர் தமிழ் மொழி, வட மொழி, பிராகிருதம் ஆகிய மூன்று பாஷைகளிலும் சிறந்த தேர்ச்சிபெற்ற பண்டிதராக விளங்கினார். வடக்கே தக்ஷசீலம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் உள்ள பண்டிதர்கள் எல்லாம் மகா ரஸிகரான மகேந்திர சக்கரவர்த்தியிடம் தங்களுடைய புலமையைக் காட்டிப் பரிசு பெறும்


இந்தியத் தேயிலையின் முன்னேற்றம்

அரக்கனின் வளர்ச்சி



இந்தியத் தேயிலை 1836-ம் ஆண்டில் முதன்முதலாக உற்பத்தி செய்யப்பட்டது. அன்றிருந்து அதன் உற்பத்தி வெகுவாக அதிகரித்துவந்து இன்று வருஷமொன்றுக்கு 50 கோடி பவுண்டுகள் விற்பனைக்குத் தயாராகும் நிலைமையில் இருக்கிறது. இதை உங்கள் நண்பர்களுக்குச் சொல்லி அவர்களையும் இந்தியத் தேயிலையை அருந்தச் சொல்லுங்கள். இதைவிடச் சிறந்த பானம் உலகில் வேறு இல்லை.

50 கோடி பவுண்டுகள்



இந்த விளம்பரத்தைக் கத்தரித்து எடுத்து உங்களுடைய பெயர், விலாசம், தொழில் முதலிய விபரங்களுடன் இந்தியத் தேயிலை கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா, என்ற விலாசத்திற்கு அனுப்பினால் "தி மார்ச் ஆப் இந்தியன் டீ" என்ற புத்தகம் உங்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். அது தேயிலைத் தொழிலைப்பற்றியும், அது எவ்வளவு உன்னதமான பானம் என்பதைப் பற்றியும் வர்ணிக்கும் புத்தகம்.

இந்தியன் டீ

உலகத்தின் உன்னத பானம்


இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

IK 187

ரான பிரகஸ்பதி உரைத்த சாஸ்திரமெல்லாம் விதுரன் அறிந்திருக்கிறான். வயதில் என்னைவிடச் சிறியவனாயினும் சிறந்த புத்திசாலியான விதுரனே நம்முடைய குலத்திற்குத் தலைவனாகக் கருதப்படுகிறான். மகனே! சூதாட்டம் வேண்டாம்! சூதாட்டத்தில் பெரிய விரோதம் வரும் என்று விதுரன் சொல்லுகிறான். ராஜ்யத்தின் நாசத்தை அவன் இதில் காண்கிறான். இந்தச் சூதாட்ட யோசனையை விட்டு விடு" என்று பலவாறாகத் துஷ்ட புத்தி கொண்ட தன் மகனுக்குத் திருதராஷ்டிரன் சொன்னான். ஆனால் அவன் கேட்கவில்லை. மகனிடத்தில் வைத்த அன்பினால் அவன் கோரியபடியே யுதிஷ்டிரனுக்குச் சூதாட்ட அழைப்பு அனுப்பி விட்டான்.

யுதிஷ்டிரனிடத்திலும் போய்ச் சூதாட்டத்தின் தீமையைப் பற்றி விதுரன் சொன்னான். "சிற்றப்பனே! இது எனக்குத் தெரிந்ததுதான். ஆயினும் திருதராஷ்டிரர் அழைக்கிறார். யுத்தத்திற்கும் ஆட்டத்திற்கும் அழைக்கப்படும்போது க்ஷத்திரியன் மாட்டேன் என்று சொல்லுவது குலதருமம் அல்லவே!" என்று யுதிஷ்டிரன் மனமில்லாமல் விருந்தும் குலாசாரத்திற்குப் பயந்து சூதாட்டத்திற்குச் சென்றார்.

நமக்கென்ன ?



பெட்டை:—இதென்ன! எதிர்த்த வீட்டுக் கடிகாரம் ஊருக்கு முந்தி அங்கே அடித்து விடுகிறது?

சேவல்:—அதைப் பற்றி நமக்கென்ன கவலை? நம்ப 'டயம்' தானே நமக்கு?...... கொக்கரகோ...கோ!

பெரியவாள் கதை

ஐயர்வாள் செல்வம்

"தியாகு! ஸ்ரீராம பக்திதான் உனக்கு நான் வைத்த செல்வம்" என்று சொல்லி விட்டுத் தந்தை ஸ்ரீராமப் பிரம்மம் ஆவியானார். தியாகராஜர் (1769-1847) தினம் 125,000 ராமஜபமும், நாமார்ச்சனமும் செய்து ஸ்ரீராமோபாசனை நடத்தினார். அண்ணா ஜல்பேசன் "அட பைத்தியமே, இதென்ன மரண ஜபமும், கூப்பாடும்!" என்று சினந்து, தம்பியின் பாட்டுகளைத் தீயிலிட்டான்; படத்தை ஆற்றிலெறிந்தான். படத்தைத் தேடி யெடுத்துத் தியாகராஜர் மறுபடியும் பக்திசெய்தார். அண்ணா தொல்லை அதிகமாயிற்று. தியாகராஜர் ராமபடத்தை மட்டும் எடுத்துக்கொண்டு தனி வீட்டில் வசித்தார்; உஞ்சவிருத்தி யெடுத்துப் பிழைத்தார். சரபோஜி ராஜா "நமது ஆஸ்தான வித்வானாக இரும்; பெருநிதி தருகிறேன்" என்றழைத்தான். "எனது நிதி, ராம சந்நிதியே. எனது பக்தி இராமசந்நிதிபால். உலக நிதி எனக்கு வேண்டாம்!" என்று மறுத்தார் தியாகராஜர். திருவாங்கூர் மன்னரும் அவ்வாறே அழைத்தார்; பக்தர் ஸ்ரீராம பக்தியே ஸாம்ராஜ்யம் என்றார். உறவினர்கள் "அட பைத்தியமே! ராஜு அரசர் முன் பாடிப் பெரிய செல்வம் சேர்த்து வந்தால் உஞ்சவிருத்திக்கு அலையாமல் சுகமாக வாழலாமே, போ!" என்று தூண்டினர். தியாகராஜர் புறப்பட்டார். எங்கே? திருப்பதிக்கு! வேங்கடேசப் பெருமானுக்குக் கீர்த்தனாஞ்சலி செய்து பிரசாதங்களைப் பெற்றுத் திரும்பினார். உறவினர்கள், "எங்கெங்கே பாடினீர்? சன்மானம் எவ்வளவு? காட்டும் செல்வத்தை" என்றனர். "இதோ வேங்கடேசப் பெருமான் கொடுத்த அருட் செல்வம்; இதுவே என் செல்வம்!" என்றார் பரமபக்தர். "சரி—பைத்தியம் முதிர்ந்து போயிற்று!" என்றனர் உறவினர் பலரும். "**ஐயர்வாள் செல்வம்**" அருட் செல்வம், அழியாத ராமநிதி என்றார் உன்னன்பர்.

பொன்னும் புவியின் புகழும் அரசவையில்
மின்னுஞ் செருக்குகளு மின்மினியே —
மன்னிறைவன்
அன்பைப் பெருக்கி அருட்செல்வம் பெற்றாரின்
இன்பத்திற் குண்டோ இணை.

—ஸ்ரீ சுத்தானந்த பாரதி.

என்றும், அவரைத் தரிசிக்க மற்ற ரிஷிகள் வந்து கூடியிருக்கிறார்கள் என்றும் அரசனுக்குச் சமாசாரம் எட்டியது. அரசன் வியப்பும் திகிலும் அடைந்து உடனே பரிவாரத்துடன் வனத்துக்குப் போனான். அரசன் ரிஷியினுடைய நிலைமையைப் பார்த்துப் பிரமித்துப் போய் உடனே சூலத்திலிருந்து அவரை இறக்கிவிட உத்தரவு இட்டு அவர் காலில் விழுந்து நமஸ்கரித்து "அறியாமையால் நான் இந்த அபராதம் செய்துவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்" என்று கெஞ்சினான்.

மாண்டவ்யர் அரசன்மேல் கோபிக்கவில்லை. நேராகத் தரும தேவதையிடம் சென்றார். ஆசனத்தில் வீற்றிருந்த தரும தேவதையைக் கண்டு "இந்த உபத்திரவத்தை அனுபவிக்கும்படியான கருமம் நான் என்ன செய்தேன்? சொல்லக் கோருகிறேன்" என்று கேட்டார். ரிஷியின் தவ வலிமையை அறிந்த தருமதேவன் பயந்து பணிந்து "சுவாமி, நீர் பக்ஷிகளையும் வண்டுகளையும் இம்சித்தீர். தானமும் பாவமும் சொற்பமாயிருந்தாலும் அவை மிகுந்த அளவில் நற்பயனையும் தீய பயனையும் தரும் என்பது உமக்குத் தெரியுமல்லவா?" என்று பதில் சொன்னான். தருமன் சொன்னதைக் கேட்ட மாண்டவ்யர் வியப்புற்று, "இந்த இம்சையை நான் எப்போது செய்தேன்?" என்று கேட்டார்.

"நீர் குழந்தையாக இருந்த காலத்தில் செய்தீர்" என்றான்.

"சிறு பையன் அறியாமையால் செய்த குற்றத்திற்குப் பெரிய தண்டனை உன்னால் விதிக்கப் பட்டது. இதற்காக நீ பூலோகத்தில் மனுஷ்யனாகப் பிறப்பாய்" என்று தரும தேவதையை மாண்டவ்ய ரிஷி சபித்தார்.

இவ்வாறு மாண்டவ்ய ரிஷியின் சாபத்தைப் பெற்ற தரும தேவதை விசித்திர வீரியனின் மனைவி அம்பாலிகையின் தாசி வயிற்றில் விதுரனாக அவதரித்தான்.

தர்ம தேவதையின் அவதாரமே ஆனபடியால் விதுரன் தர்ம சாஸ்திரத்திலும் ராஜ நீதியிலும் ஒப்பற்ற தேர்ச்சியடைந்து ஆசையும் கோபமுமற்ற மகாத்மாவென்று உலகத்தில் பெரியோரெல்லாராலும் கருதப்பட்டான். பால்ய பருவத்திலேயே திருதராஷ்டிர ராஜாவுக்குப் பிரதான மந்திரியாக பீஷ்மரால் அமைக்கப்பட்டான்.

விதுரனுக்கு ஒப்பான தர்ம நிஷ்டனும் அவனைப்போல் சிறந்த அறிவு பெற்றவனும் மூவுலகங்களிலும் யாரும் இல்லை என்று வியாசர் சொல்லுகிறார். திருதராஷ்டிரன் சூதாட்டத்துக்கு அனுமதி கொடுத்த காலத்தில் விதுரன் அவன் காலில் விழுந்து, "அரசனே! பிரபுவே! இந்தக் காரியத்தை நான் ஒப்பவில்லை. இந்தச் சூதாட்டத்தின் காரணமாக உமது புத்திரர்களுக்கு விரோதம் வரும். வேண்டாம்" என்று மிகவும் வற்புறுத்தித் தடுத்தான். திருதராஷ்டிரனும் துரியோதனனைத் தனியாக அழைத்துச் சொல்லிப் பார்த்தான்.

"காந்தாரி மகனே!" என்று பிரியமாகக் கூப்பிட்டு, "சூதாட்டம் வேண்டாம். விதுரன் அங்கீகரிக்கவில்லை. மிகச் சிறந்த புத்தியுள்ள விதுரன் நமக்கு எப்போதும் நன்மையையே சொல்லுபவன். அவன் என்ன சொல்லுகிறானோ அதுவேதான் நமக்கு நன்மை தரும். நிகழ்ந்ததும் நிகழப்போவதும் அறிந்தவ


"திருடர்கள் இந்தப் பக்கம் வந்தார்களே, அவர்கள் எந்த வழியாகச் சென்றார்கள்? ..."

வியாசர் விருந்து

சக்கரவர்த்தி - ராஜகோபாலாச்சாரியார்

வி து ர ன்

மௌன உறுதியும் சாஸ்திர அறிவும் பெற்றுச் சத்தியத்திலும் தவத்திலும் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த மாண்டவ்யர், ஊருக்கு வெளியே ஒரு வனத்தில் ஆசிரமம் கட்டிக் கொண்டு வசித்து வந்தார். ஒரு நாள் அவர் ஆசிரமத்துக்கு வெளியே ஒரு மரத்தடியில் மௌனத்தில் ஆழ்ந்திருந்தபோது சில கொள்ளைக்காரர்கள் அந்தப் பக்கம் வந்தார்கள். அவர்களை அரசனுடைய சேவகர்கள் துரத்தி வந்தபடியால் அவர்கள் கையில் அகப்படாமல் பதுங்க அந்த இடம் வசதியாக இருக்கும் என்று எண்ணி ஆசிரமத்தில் பிரவேசித்தார்கள். கொள்ளையடித்துக்கொண்டு வந்த சொத்துக்களை அங்கே ஒரு மூலையில் வைத்து விட்டு மற்றொருபுறம் அவர்களும் ஒளிந்து கொண்டார்கள். அரசனுடைய சேவகப்படையானது திருடர்கள் சென்ற வழியைத் தொடர்ந்து கொண்டு ஆசிரமத்தண்டை வந்து சேர்ந்தது. மௌனமாக உட்கார்ந்து யோகத்தில் அமர்ந்திருந்த மாண்டவ்யரைப் படைத் தலைவன் பார்த்து "திருடர்கள் இந்தப் பக்கம் வந்தார்களே, அவர்கள் எந்த வழியாகச் சென்றார்கள்? சீக்கிரம் சொல்லுங்கள்; அவர்களைத் தொடர்ந்து போய்ப் பிடிக்க வேண்டும்" என்று கேட்டான். யோகத்தில் ஆழ்ந்திருந்த முனிவர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. படைத் தலைவன் பல தடவை அதட்டிக் கேட்டான்.

முனிவர் காதில் ஒன்றும் படவில்லை. இதற்குள் சேவகர்களில் சிலர் ஆசிரமத்துக்குள் பிரவேசித்துக் களவு போன சொத்துக்கள் அங்கே இருப்பதைக் கண்டார்கள். உடனே படைத் தலைவனைக் கூப்பிட்டார்கள். எல்லாரும் உள்ளே போய்ப் பார்த்தார்கள். களவு போன எல்லாச் சொத்துக்களும் சிக்கின. ஒளிந்திருந்த திருடர்களையும் கண்டார்கள்.

ஓகோ! பிராமணர் ஒன்றும் பேசாமல் மௌன வேஷம் போட்டதனுடைய காரணம் இப்போது தெரிந்து விட்டது. இவரே திருடர்களுக்குத் தலைவர், இவருடைய ஏவுதலினாலே தான் இந்தக் கொள்ளை நடந்திருக்கிறது என்று தீர்மானித்துக் காவலாளிகளை அங்கேயே வைத்து விட்டுப் படைத்தலைவன் மட்டும் அரசனிடம் சென்று கையும் களவுமாக மாண்டவ்ய ரிஷியைப் பிடித்துவிட்ட சங்கதியைச் சொன்னான்.


பிராமணன் திருட்டுக் கூட்டத்திற்குத் தலைவனாக இருந்து கொண்டு ரிஷி வேஷம் போட்டு உலகத்தை ஏமாற்றி வந்திருக்கிறான் என்று அரசன் மிகுந்த கோபங்கொண்டு "பாதகனை உடனே சூலத்தில் ஏற்றுங்கள்" என்று விவரம் விசாரிக்காமல் தண்டனை கொடுத்து விட்டான்.

படைத் தலைவன் திரும்பிச் சென்று, மாண்டவ்யரை அங்கேயே சூலத்தில் ஏற்றிவிட்டுக் களவு சொத்துக்களை அரசனிடம் ஒப்புவித்து விட்டான்.

சூலத்திலிருந்த தர்மாத்மாவான முனிவரோ வெகு காலம் வரையில் மரணம் அடையவில்லை. யோகத்திலிருந்த காலத்தில் சூலத்தில் ஏற்றப்பட்டபடியால் அந்த யோக சக்தியால் அப்படியே உயிருடன் இருந்து வந்தார். வனத்தில் அங்கங்கே இருந்த ரிஷிகள் அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். "ஓ மாண்டவ்யரே! இந்த பயங்கரமான துயரத்தைத் தாங்கள் ஏன் அடைந்தீர்கள்?" என்று தபோதனர்கள் கேட்டனர்.

"நான் யாரிடத்தில் குற்றம் சொல்லுவேன்? உலகத்தைக் காக்கும் அரசனுடைய சேவகர்கள் இவ்வாறு எனக்குச் சிக்ஷை கொடுத்திருக்கிறார்கள்" என்று மாண்டவ்யர் சொன்னார்.

சூலத்தில் ஏற்றப்பட்ட ரிஷி அன்ன ஆகாரமின்றி உயிருடனே இருக்கிறார்



ஸ்ரீமதி எம். எஸ்.
சுப்புலக்ஷ்மியின்

இன்னிசை களஞ்சியம்

செந்தமிழ் நாட்டுச் சங்கீதத்தை
தெற்கே சிங்களத்திலும்,
வடக்கே பம்பாயிலும் தனது
இன்னிசையால் ஒலிக்கச்செய்த

இசைவாணி கோகிலகான
ஸ்ரீமதி எம். எஸ்.
சுப்புலக்ஷ்மியின்
"எச். எம். வி." ரிகார்டு சங்கீதம்

★

எல்லா "எச். எம். வி." கிராமபோன்
வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

N· 18218 { கண்ணெடுத்தாகிலும்
—சிம்மேந்திரமத்திமம்

N· 18208 { மாதயை
—வஸந்த

N. 18205 { கண்டதுண்டோ
வானத்தின் மீது

N. 18100 { நீ இரங்காயெனில்
—அடாணா
வண்டினமுரலும்
—தோடி

N. 18685 { ஸரகுணபாலிம்ப
—கேதாரகௌளம்

N. 18680 { என்னகானு ராமபஜன
—பந்துவராளி

சிறந்த சங்கீதம்
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"
சீரிய ஒலிப்பதிவு



'ஹை பிடலிடி' ஊசிகள்
ஒரு ஊசியினால் பல ரிகார்டுகள் பாடிவைக்கலாம்
10 ஊசிகள் பாக்கெட் 1க்கு ரூ 2/4/-

ஆகாச வெடி

"சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் பிரின்ஸிபால் டாக்டர் பி. பி. டே ஆக்டிங் கல்வி இலாகா அதிகாரியாக வேலை பார்ப்பார். இப்பதவிக்கு ஓர் இந்தியர் நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்." —தினசரி.

இதுவே கடைசித் தடவையாகவும் இல்லாமலிருக்க வேண்டும்.

* * *

"பதினைந்து வருஷ காலமாக அட்வகேட் ஜெனரல் பதவியை வகித்து வந்த ஸர் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர் மேற்படி பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். ராஜிநாமாவின் காரணம் தெரியவில்லை." —சென்னைச் செய்தி.

கோர்ட்டுக்கும் வீட்டுக்குமாய் எத்தனை காலைக்கு அல்லாடிக் கொண்டிருப்பது என்ற காரணமா யிருக்கலாம்.

* * *

"பச்சையப்பன் காலேஜ் ஹைஸ்கூல் கட்டடத்திலுள்ள ஜன்னல்களிலிருந்து கண்ணாடிகள் திருடப் பட்டிருக்கின்றன. கண்ணாடி கிடைப்பது அரிதா யிருப்பதே இதற்குக் காரணமாகும்."

—தினசரி.

விறகுக் கட்டை கிடைப்பது அரிதா யிருக்கிறதென்று ஜன்னலின் மரச் சாமான்களையும் கொண்டு போகாமல் விட்டார்களே!

* * *

"கரி இல்லை என்பதற்காகப் பொது ஜனங்களின் உபயோகத்திற்காக விடப்படும் ரயில் வண்டிகள் இனி மேற்கொண்டு குறைக்கப்பட மாட்டாது."

—புது டில்லி செய்தி.

அதற்கென்ன? வேறு ஏதாவது காரணத்தைச் சொல்லிக் குறைத்து விட்டால் போகிறது!

* * *

"மகாத்மா காந்தி தனக்கு மிகவும் ஆத்மார்த்தமான இருவரை இழந்து விட்டார். இதனால் அவருக்கு 'ஒண்டியாய்' இருப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்படக்கூடும். இதை முன்னிட்டு சர்க்கார் அவரை வேறு இடத்திற்கு மாற்றுவார்களா?"

—டில்லி சட்டசபையில் பாண்டே.

அந்த வேறு இடம் சிறைக்கு வெளியிலிருக்கவேண்டும் என்பதே பொது ஜனங்கள் கோரிக்கை.

சேராத கடிதம்

இந்திய வைஸ்ராய் வேவல் துரைக்கு ஆகாகான் அரண்மனை எழுதிக்கொள்வது :

ஐயா,

உங்களுக்குப் புண்ணியம் உண்டு. என் பேச்சைக் கொஞ்சம் கேளுங்கள். எனக்கு வீணான அபக்யாதியை ஏற்படுத்தாதீர்கள். வருங்காலத்து ஜனங்கள் என்னை நிந்திக்கும்படி செய்யாதீர்கள். தயவு செய்து மகாத்மா காந்தியையும் மற்றும் என்னிடம் ஒப்படைத்துள்ள தேச பக்தர்களையும் சீக்ரமே விடுதலை செய்யுங்கள். அல்லது சட்டசபையில் யாரோ சொன்னதுபோல் மகாத்மாவை வேறு இடத்துக்காவது மாற்றி விடுங்கள். எனக்கு ரொம்பப் பயமா யிருக்கிறது. "மகாதேவ தேசாய் இறந்தார்." "கஸ்தூரிபாய் இறந்தார்" என்று பிற்காலத்தில் பேச்சு வரும்போதெல்லாம் என் பெயர் தானே முக்கியமாய் அடிபடும்? "ஆகாகான் மாளிகையில் இறந்து போனார்கள்" என்று தானே சொல்வார்கள்? இந்த அவச்சொல் எனக்கேதற்கு? மகாத்மா காந்தியின் பாத தூளி பட்டதினால் நான் புனிதமடைந்தேன். எனக்குக் கிடைத்த அந்த பாக்கியமே போதும். அத்தோடு என்னை விடுங்கள். இன்னும் என்னிடத்திலிருந்து வேறு எந்த பயங்கரமான செய்தியையும் ஜனங்களை எதிர்பார்க்கச் செய்ய வேண்டாம். இதுவரை எடுத்துக்கொண்ட கெட்ட பெயரும் கிடைத்த அபகீர்த்தியும் போதும். மகாத்மா காந்தியை உடனே விடுதலை செய்து எனக்கு விமோசனம் அளியுங்கள்.

இப்படிக்கு,
ஆகாகான் அரண்மனை.
பூனா.

"பாக்குக்குக்கூட சர்க்கார் வரி விதித்திருக்கிறார்கள்." —ஒரு செய்தி.

வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்பவர்கள் பல்லைக் கடித்துக்கொண்டு இதைச் சமாளிக்க வேண்டியதுதான்.

* * *

"காரியக் கமிட்டி மெம்பர்கள் சர்க்கார் ஊழியர்களைப் போன்றவர்கள். சிறையில் அவர்கள் தொழில் நடத்த அனுமதிக்கப் படுவதில்லை."

—சட்டசபையில் பதில்.


சர்க்கார் ஊழியர்களை இவ்விதம் கௌரவித்த விஷயத்தைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

* * *

"லைசென்ஸ் இல்லாமல் விறகுக் கடை வைத்து நடத்தியதற்காகத் திருவல்லிக்கேணியில் ஒருவருக்கு பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் ஒரு மாத சிறைத் தண்டனை விதித்தார்." —ஒரு செய்தி.

இதைவிட அவருக்கு லைஸென்ஸ் கொடுத்தே தண்டித்திருக்கலாம்!

ஐந்து ரூபாய் பரிசு : சென்ற இதழில் வெளியான "கொடுத்த வேலை!" என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர் : டி. என். கணேசன், தியாகராயநகர், சென்னை.



சத்தமிடாது சீனச்சட்டி சங்கீதம் பாடுகிறது!

சமையல் வேலைகளை
சீர்படுத்த வருகிறது



காமதேனு
வனஸ்பதி

உயர்தரமான பொரிக்கும் சாதனம் இதோ வந்து விட்டது. காமதேனு மணமற்றது. ஆகையால் அதைக்கொண்டு தயாரித்த ஆகாரவகைகள் அவற்றின் இயற்கை மணத்தை இழப்பதில்லை. பரிசுத்தமானது. கைபடாமல் தயாரிக்கப்பட்டது. 4 காலன், 10 பவுண்டு, 5 பவுண்டு கொண்ட சீல் வைத்த டின்களில் விற்கப்படுகிறது. காமதேனுவை உபயோகிப்பதால் எக்காலமும் உண்டு சமையலுக்கு நெய் வெண்ணெயைப் போன்றது.

தயாரிப்பவர்கள் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்.

மேட்டூர்டாம் — தென்னிந்தியா

KVK.1.TM.

மானேஜிங் ஏஜண்டுகள் :
சேஷசாயி பிரதர்ஸ் லிட்.,
திருச்சிராப்பள்ளி.

சோல் விற்பனை ஏஜண்டுகள் :
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபியூடர்ஸ் லிட்.,
120, அரமனைக்காரத்தெரு, மதராஸ்.

ரேஷியாவும் நியூஸிலாந்தும் பிரிட்டனோடு சேர்ந்து போராடும்போது அருகிலுள்ள அயர்லாந்து மட்டும் ஏன் தனித்து நிற்கிறது?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சர்ச்சிலினுடைய மூதாதைகள் தான் சொல்லவேண்டும். பல நூறு வருஷ காலமாய் அயர்லாந்தைப் பலவந்தமாய் அமுக்கி வைத்திருந்த பாவத்தின் பலன்தான் இது. சுதந்திரப்போரில் உயிர் நீத்த மாக்ஸ்வினி போன்றவர்களின் ஆவிகள்தான் இப்போது அயர்லாந்தை வட்டமிட்டு நெருக்கடியான யுத்த சமயத்தில் பிரிட்டனுக்கு உதவி செய்யாமல் தடுக்கின்றன.

இந்தியாவில் ஹிட்லருக்கும் டோஜோவுக்கும் பரம விரோதிகளாயிருந்த ஜவஹர்லால்ஜி முதலிய தலைவர்களை இன்று இந்திய அதிகார வர்க்கம் எந்தக் குருட்டுத்தனத்தினாலே சிறையில் அடைத்து வைத்திருக்கிறதோ, அதே குருட்டுத்தனத்தை அயர்லாந்து விஷயத்தில் முன்னே பிரிட்டிஷார் கையாண்டதின் விபரீத பலனைத்தான் இப்போது காண்கிறோம்.

ஆகவே, ''அயர்லாந்தைப் பாருங்கள்! நன்றாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்று சர்ச்சிலுக்கும் மற்ற பிரிட்டிஷ் மந்திரிகளுக்கும் நாம் எச்சரிக்கை செய்கிறோம். அயர்லாந்தின் இன்றைய நிலைமையைப் பார்த்துக் கொண்டு இந்தியா விஷயத்தை யோசித்து முடிவு செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.

* * *

ஆனால், நமது எச்சரிக்கையும் கோரிக்கையும் நேர் விபரீதமான பலனை அளிக்கலாம் என்பதையும் நாம் அறிந்து தானிருக்கிறோம்.

சர்ச்சில் கூட்டத்தார் அயர்லாந்தைப் பார்த்து நாம் நினைப்பதற்கு நேர்மாறான பாடத்தைக் கற்றுக் கொள்ளக்கூடும்.

''அயர்லாந்துக்குச் சுதந்திரம் கொடுத்ததின் பலனைப் பாருங்கள். இந்த யுத்த நெருக்கடியில் நடுநிலைமை வகித்து நம் கழுத்தை அறுக்கிறது! இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்தாலும் இப்படித்தான் ஆகும்! ஆகையால் இந்தியாவை அமுக்கிவைத்துக் கொண்டிருப்பதுதான் சரி!'' என்ற பாடத்தைச் சர்ச்சில் கோஷ்டியார் அயர்லாந்திடமிருந்து கற்றுக்கொள்ளலாம்.

அதற்கும் இந்தியாவிலுள்ள நாம் தயாராகத் தான் இருக்கவேண்டும். அதற்கேற்ப நமது தேசத்தலைவர்கள் இந்தியாவின் சுதந்திரப் போர்த் திட்டத்தை வகுக்க வேண்டும்.

அயர்லாந்தின் தற்போதைய நிலைமையிலிருந்து இந்தியாவிலே நாம் கற்றுக் கொள்ளவேண்டிய பாடம் ஏதாவது இருக்கிறதா?

பேஷாக இருக்கிறது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் தொடர்பு இருக்கிறது என்ற காரணத்திற்காக டிவாலரா ஐரிஷ் அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளாமலே இருந்திருந்தால், இப்போது அயர்லாந்து இந்த நிலைமைக்கு வந்திருக்க முடியாது.

ஒரு நாட்டின் அரசாங்கத்தில் கால் வாசியும் அரைக்கால் வாசியும் கிடைப்பதாயிருந்தால் அதை ஜனங்கள் ஒப்புக் கொள்ளக் கூடாது. அப்படி ஒப்புக் கொள்வதினால் பூரண சுதந்திரம் கிடைப்பது தடைப்படும்.

ஆனால், அரசாங்கப் பொறுப்பில் முக்கால் பங்கு கிடைப்பதாயிருந்தால், கட்டாயம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒப்புக்கொண்டு மற்றக் கால் பகுதியைப் பெறுவதற்குப் பிரயத்தனம் செய்தால் சுலபமாக வெற்றி பெறலாம்.

பூரண சுதந்திரமானது உரித்த வாழைப் பழத்தைப்போல் வாயில் வந்து விழும் வரையில் காத்திருப்பதென்றால், காத்துக்கொண்டே இருக்க வேண்டியதுதான்.

முழு அரசாங்கமும் விள்ளாமல் உடையாமல் கைக்கு வரும்போதுதான் ஒப்புக்கொள்ளலாம் என்பது, அலை ஓய்ந்த பிறகு கடலில் இறங்கலாம் என்று காத்திருப்பதையே ஒக்கும்.

இதுமட்டு மல்ல. அயர்லாந்துக்குச் சுதந்திரம் கொடுத்தபோது, பிரிட்டிஷார் அயர்லாந்தில் அல்ஸ்டர் என்ற பகுதியைத் தனியாகப் பிரித்தார்கள். அங்கே இன்றுவரை தனி அரசாங்கம் தான் நடந்து வருகிறது. ''முழு அயர்லாந்தும் கைக்கு வந்தால்தான் அரசாங்கம் நடத்துவோம், இல்லாவிட்டால் பிரிட்டிஷ் ஆட்சிக்குள்ளேயே இருப்போம்'' என்று ஐரிஷ் தலைவர்கள் சொல்லியிருந்தால், அவர்கள் இன்னமும் சிறைக்குள்ளேயே தான் இருந்திருப்பார்கள்.

உலகத்துச் சுதந்திர நாடுகளுடனே இப்போது அயர்லாந்து அநுபவித்து வரும் சம சுதந்திர அந்தஸ்து அதற்கு ஒருநாளும் கிடைத்திராது.

இந்தப் பாடத்தையும் அயர்லாந்தைப் பார்த்து இந்திய மக்கள் படித்துக் கொள்ள வேண்டும்.

சிறிய சேமிப்புத் திட்டம்

தேசிய சேமிப்புப் பத்திரங்கள்:

இந்திய சர்க்காரால் கியாரண்டி செய்யப்பட்ட தகுந்த வட்டி தரக்கூடிய முதல்தரமான ஒரு கைமுதல் திட்டம். இது யுத்த காலத்திற்காக ஏற்பட்ட திட்டமல்ல. யுத்த காலத்திற்கு மாத்திரமல்லாமல் தேசிய முன்னேற்றத்திற்காக யுத்தத்திற்குப் பிறகும் பல வருஷங்களுக்கு ஏற்பட்டது.

தொகுதிகள்:—ரூ. 10, ரூ. 50, ரூ. 100, ரூ. 500, ரூ. 1,000.

இது 4-1/6% வட்டி கொடுக்கிறது.

12 வருஷத்தில் பூர்த்தி அடைகிறது.

உங்கள் ரூ. 10-க்கு பூர்த்தி காலத்தில் ரூ. 15 கொடுக்கப்படுகிறது. 3 வருஷங்களுக்குப் பிறகு எப்பொழுதாகிலும் ரொக்கம் செய்து கொள்ளலாம்.

இதற்கு வருமான வரி கிடையாது.

தபாலாபீஸ்களிலும், சேமிப்பு நிதிகளிலும் அனுமதிக்கப்பட்ட ஏஜண்டுகளிடமும் வாங்கக் கூடியது.

இதற்குமுன் சேமித்து வைக்காதவர்களுக்கு இதுவே சரியான சமயம்.

உங்கள் எதிர்காலத்தை இப்பொழுதே பலப்படுத்துங்கள். தேசிய சேமிப்பு பத்திரங்களை உடனே வாங்குங்கள்.

எதிர்த்தே பழக்கப்பட்ட ஐரிஷ் ஜனங்களும் டிவாலராவைப் பூரணமாக ஆதரித்து நின்று வருகிறார்கள்.

* * *

அயர்லாந்து இப்போது அனுபவித்து வரும் சுதந்திரம் பூரண சுதந்திரந்தானா, இல்லையா என்று பரீட்சை பார்ப்பதற்கு டிவாலராவுக்குத் தற்சமயம் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

''பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த சுதந்திர நாடுகளுக்கெல்லாம் தனித் தனியே பூரண சுதந்திரம் உண்டு; பிரிட்டன் ஈடுபட்டிருக்கும் யுத்தத்திலேகூட அவை ஈடுபடாமல் இருக்கலாம்'' என்று சொல்லப்பட்டு வந்தது. கானடா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்கள் அதைப் பரீட்சை பார்க்காமல் பார்லிமெண்டில் தீர்மானம் செய்து யுத்த ஆரம்பத்திலேயே யுத்தத்தில் சேர்ந்து விட்டன. ஆனால், அயர்லாந்து மட்டும் தன்னுடைய சுதந்திரத்தைப் பிடிவாதமாகப் பரீட்சை பார்த்து வருகிறது. நாளது வரை யுத்தத்தில் சேராமல் கண்டிப்பாக நடுநிலைமை வகித்து வருகிறது.

இத்தனை நாளும் இதை எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு சகித்துவந்த பிரிட்டிஷ் சர்க்காருக்கு இப்போது அதைச் சகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நடுநிலைமை வகிக்கும் அயர்லாந்தில், ஜெர்மானிய - ஜப்பானியத் தூதர்கள் இருந்து வருகிறார்கள்.

ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனை ஆரம்பிக்க வேண்டியிருக்கும் சந்தர்ப்பத்தில், பிரிட்டனுக்கு வெகு சமீபத்தில் ஜெர்மன் - ஜப்பான் தூதர்கள் இருப்பதால், பகைவர்களுக்குத் தகவல்கள் போய்விடலாமென்றும், இதனால் பல பிரிட்டிஷ் ஸோல்ஜர்களின் உயிர்களுக்கு அபாயம் நேரலாமென்றும் பிரிட்டிஷார் பயப்படுகிறார்கள்.

இதற்காக, தாம் நேரில் சொன்னால் ஏதாவது விபரீதம் ஆகப் போகிறதென்று சர்ச்சில் துரை பயந்து ரூஸ்வெல்ட் மூலமாக ஆட்சேபத்தைத் தெரிவித்தார். ஆனால் சமாதானமாகச் சொன்னது, கண்டிப்பாய்ச் சொன்னது, பயமுறுத்திச் சொன்னது ஒன்றும் டிவாலராவிடம் இதுவரையில் பலிக்கவில்லை. ''உனக்கும் பெப்பே! உங்கனப்பனுக்கும் பெப்பே!'' என்று டிவாலரா அமுக்குப் பிள்ளையாராய் உட்கார்ந்திருக்கிறார். ஜெர்மன் - ஜப்பான் தூதர்களை அவர் போகச் சொல்ல மறுக்கிறார்.

டிவாலரா செய்யும் காரியம் நியாயமா? — இதைப் பற்றிப் பேச நமக்கு எவ்வித பாத்தியதையும் கிடையாது. அதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் ஐரிஷ் மக்கள்.

இந்த மகா பெரிய யுத்தத்தில் என்ன வெல்லாமோ அதிசயங்களைப் பார்த்து வருகிறோம். உலகத்தைக் காப்பாற்றுவதற்காகவே இந்த யுத்தம் நடைபெறுவதாக அடிக்கடி சொல்லப்பட்டு வந்தாலும், ஒருவராவது தங்களுடைய சுயநலத்தைப் பாதுகாப்பதில் பின் வாங்கவில்லை.

ருஷியாவும் ஜப்பானும் இன்னும் நேர்முகமாக யுத்தத்தில் இறங்காமல் இருப்பது ஒரு மகத்தான அதிசயம்.

பின்லாந்து என்னும் சிறு தேசம் ஜெர்மனியுடன் சேர்ந்து ருஷியாவுடன் யுத்தம் நடத்தி வருகிறது. ஆனால் பின்லாந்துக்கும் அமெரிக்காவுக்கும் இன்னமும் சமாதானம் நிலவி வருகிறது. அமெரிக்கத் தூதர் பின்லாந்தில் இன்னும் இருந்து வருகிறார்.

இப்படியெல்லாம் யுத்தத்தில் நேராக ஈடுபட்ட தேசங்களே நடந்து வரும் போது, டிவாலராவும் அவரைத் தாங்கி நிற்கும் ஐரிஷ்மக்களும், 'இந்த யுத்தத்தில் நடுநிலைமை வகிப்பதே தங்கள் நன்மைக்கு உகந்தது' என்று கருதும் பட்சத்தில், அது நியாயமா இல்லையா என்று மற்றவர்கள் விவாதிப்பதிலேயே அர்த்தம் கிடையாது.

ஆனால், அயர்லாந்தின் நடுநிலைமையினால் பிரிட்டிஷ்—அமெரிக்கக் கட்சிக்கு யுத்தத்தில் பெரும்பாதகங்கள் விளையக் கூடும் என்பதில் சந்தேகமில்லை! பல பிரிட்டிஷ் — அமெரிக்க உயிர்கள் நஷ்டமடைவதற்கு அது காரணமாகக் கூடும்.

இதற்கு மாறாக, அயர்லாந்து நடுநிலைமையைக் கைவிட்டு, பிரிட்டிஷ் கட்சியில் சேருமானால், அதனால் பிரிட்டிஷ் கட்சிக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டு.

அந்த நன்மைகளை இன்று பிரிட்டன் அடையாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? பல நூறு வருஷகாலமாகத் தொடர்புள்ள பக்கத்து நாடாகிய பிரிட்டிஷ் சிநேகத்தை அயர்லாந்து இன்று ஒதுக்கித் தள்ளுவதற்குக் காரணம் என்ன? கானடாவும் ஆஸ்தி

அயர்லாந்தைப் பார்!

அயர்லாந்து வாசிகளான ஐரிஷ் காரர்களைப் பற்றி அநேக ரஸமான கதைகள் உண்டு. அவற்றில் ஒன்று என்னவென்றால் :

ஐரிஷ்காரன் ஒருவன் ஏறிச் சென்ற கப்பல் கடலில் முழுகி விட்டது. ஆனால் அந்த ஐரிஷ்காரன் மட்டும் முழுகாமல் ஒரு பலகையைப் பிடித்துக்கொண்டு நீந்திக்கொண்டே போனான். இரண்டு நாள் அன்ன ஆகாரம் தண்ணீர் இல்லாமல் மிதந்த பிறகு, கடைசியாக அவன் ஒரு தீவை அடைந்து கரை ஏறினான். கரை ஏறிப் போய்க் கொண்டிருந்தபோது முதலில் எதிர்ப்பட்ட மனிதனை அவன் கேட்ட கேள்வி என்ன தெரியுமா? சோறு கிடைக்குமா, தண்ணீர் கிடைக்குமா என்றெல்லாம் அவன் கேட்கவில்லை.

"இந்தத் தீவில் சர்க்கார் உண்டா?" என்று கேட்டான்.

"உண்டு!" என்றான் வந்தவன்.

"அப்படியானால், அதற்கு நான் எதிரி!" என்றான் அந்த ஐரிஷ்காரன்.

இந்தக் கதை எதனால் ஏற்பட்டதென்றால், அயர்லாந்து தேசமானது பல நூறு வருஷ காலம் பிரிட்டிஷாருக்கு உட்பட்டு இருந்தது. சில சமயம் யதேச்சாதிகார பிரிட்டிஷ் சர்க்கார் அங்கே நடக்கும்; வேறு சில சமயங்களில் சில ஐரிஷ் பிரமுகர்களையும் சேர்த்துக்கொண்டு பிரிட்டிஷார் ஆட்சி நடத்துவார்கள். எப்படி நடந்தாலும், ஐரிஷ் தேசத்து மக்கள் சர்க்காருக்கு விரோதமாகவே இருப்பார்கள். விரோதமாக இருப்பதோடன்றி, ஓயாமல் சர்க்காரை எதிர்த்துக் கலகம் செய்து கொண்டுமிருப்பார்கள். இப்படிப் பல நூறு வருஷ காலம் தலைமுறை தலைமுறையாகச் சர்க்காரை எதிர்த்துப் பழக்கமாகி விட்டபடியால், "சர்க்கார் என்றாலே எதிர்க்க வேண்டியதுதான்!" என்ற எண்ணம் ஐரிஷ்காரர்களின் இரத்தத்தில் ஊறிப் போயிருந்தது. — இந்த ஐரிஷ் மனப்பான்மையை முன்னிட்டே மேற்படி கதையும் எழுந்தது.

* * *

இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னால் இந்தியாவின் பத்திரிகைகளிலும் தேசியப் பிரசங்க மேடைகளிலும், "அயர்லாந்தைப் பார்!" என்னும் கோஷம் அதிகமாகக் கேட்பதுண்டு. அப்போது ஐரிஷ்காரர்கள் தங்கள் சுதந்திரப் போரின் கடைசி அத்தியாயத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். புரட்சி வேலைகளும், சிறைத் தண்டனை - தூக்கு தண்டனைகளும் சர்வ சாதாரணமாயிருந்தன. மாக்ஸ்வினி என்னும் ஐரிஷ் பெரியார் சிறையில் 64 தினம் உண்ணா விரதம் இருந்து உயிரை விட்டார். இந்தச் சம்பவம் உலகத்தையெல்லாம் அப்போது ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

அந்த நாளிலேதான் இந்தியாவின் தேசியத் தலைவர்கள் "பாருங்கள்! எத்தனை நூறு வருஷம் அன்னிய ஆட்சியில் இருந்த பிறகும் ஐரிஷ்காரர்கள் எப்படிச் சுதந்திரப் போரைத் தீரமாக நடத்துகிறார்கள்!" என்று ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுவது வழக்கம்.

சென்ற மகா யுத்தம் முடிந்த சில காலத்துக்கெல்லாம் அப்படி "அயர்லாந்தைப் பார்!" என்று சொல்வது நின்று விட்டது.


அப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருந்த லாயிட் ஜார்ஜ் தைரியத்தைக் கையில் பிடித்துக்கொண்டு, அயர்லாந்துக்குச் சுதந்திரத்தைக் கொடுத்து விட்டார்.

அவர் கொடுத்தது, வெறும் சுதந்திரமல்ல; பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தோடு சேர்ந்து அநுபவிக்கும் சுதந்திரந்தான். இதை ஒப்புக்கொள்வதா, இல்லையா என்ற பிரச்னை ஐரிஷ் தலைவர்களுக்குள் எழுந்தது. கிரிப்பித்ஸ், காலின்ஸ் முதலியவர்கள் "ஒப்புக் கொள்ளலாம்" என்றார்கள். டிவாலரா "கூடாது" என்றார். இரு கட்சிக்கும் போர் மூண்டது. இந்த சகோதர உள்நாட்டுச் சண்டையில் கிரிப்பித்ஸ், காலின்ஸ் முதலிய சுதந்திர வீரர்கள் உயிரை விட்டார்கள்.

ஆனாலும் உயிரை விட்டவர்களின் கட்சிதான் சரியானது என்று பின்னால் தெரிய வந்திருக்கிறது. அவர்கள் "ஒப்புக் கொள்ளலாம்" என்று சொன்ன அரசாங்க முறையை "அது கூடாது" என்று சொன்ன டிவாலரா பிற்பாடு ஏற்றுக்கொண்டார். ஏற்றுக் கொண்டு அவர் பல வருஷ காலமாக அயர்லாந்தில் ஆட்சி நடத்தி வருகிறார். பல நூறு வருஷ காலமாகச் சர்க்காரை



இருமல்
இதைப் போல் அபாயகரமானது
இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும்
உயர்ந்த மருந்து
ஸிரோலின்
ரோச்



நாடெங்கும்
அழகிற் சிறந்த மாதர்கள்
உவந்து உபயோகிப்பது
மைசூர் சந்தன சோப்
அது அவர்களது அழகை நன்கு பாதுகாக்கிறது. இந்த சோப் ஒன்றுதான் தங்களது அழகை பாதுகாக்கவல்லது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்
மைசூர் சந்தன சோப்

-உம்மன்



இந்திய நிர்வாக சபை
ஜஸ்டிஸ் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து ஈ.வே.ரா.வை நீக்குவதற்குச் சில காலமாக நடந்துவரும் முயற்சி பலிப்பதாகத் தெரியவில்லை.
ஈ.வே.ரா. பெரியார்
ஜஸ்டிஸ் கட்சி

நிகழ்ச்சிச் சித்திரம்



தலையங்கங்களை ஆவலுடன் படித்தது போல் வேறு எந்த தினசரித் தலையங்கங்களையும் தமிழர்கள் படித்ததில்லை. ஸ்ரீ சொக்கலிங்கத்தின் எழுத்துவன்மை பிரசித்தி பெற்றது. அரசியல் விஷயங்களில் ஆணித்தரமாகவும், வழ வழ குழ குழ இல்லாமலும், தயவு தாட்சணியமில்லாமலும், உள்ளது உள்ளபடி வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாக எழுதுவதில் ஸ்ரீ சொக்கலிங்கத்துக்கு நிகர் ஸ்ரீ சொக்கலிங்கந்தான். அவருடைய புதிய "தினசரி"ப் பத்திரிகையை மனப்பூர்வமான மகிழ்ச்சியுடன் நாம் வரவேற்கிறோம். தமிழ்நாடு ஒருமுகமான உற்சாகத்துடன் "தினசரி"யை வரவேற்குமென்று பூரணமாய் நம்புகிறோம்.

கஸ்தூரிபாய் நிதி

மகான்களை அவர்கள் உயிரோடிருக்கும் காலத்தில் அலட்சியம் செய்து அவர்கள் காலஞ் சென்ற பின் அபாரமாய்ப் போற்றுகிறவர்கள் என்ற நல்ல பெயர் இந்தியர்களுக்கு எப்போதும் உண்டு. அதற்குப் பழுது உண்டாகாதபடி, ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியின் ஞாபகத்தை நிலை நாட்டுவதற்காக 75 லட்சம் ரூபாய் நிதி வசூலிப்பதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. மேற்படி தொகையை வசூலித்து, வரும் அக்டோபர் மீ 2உ மகாத்மா காந்தியின் 75-வது பிறந்த தினத்தன்று அவரிடம் அளிப்பது என்றும் பெரியோர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். புண்ணியவதியின் பெயரால் புண்ணியமான காரியத்துக்காக வசூலிக்கப்படும் புண்ணிய நிதிக்குப் பணங் கொடுக்கும் பாக்கியம் பெற்றவர்கள் புண்ணியசாலிகள் என்பதில் சந்தேகமில்லை. அந்தப் புண்ணியத்தில் ஒரு பகுதியைத் தமிழ் மக்களும் கட்டிக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

தீரரின் ஞாபகம்

தமிழ் நாட்டு அரசியல் மேடையில் சிம்மமாக கர்ஜனை புரிந்து வந்த ஸ்ரீ சத்தியமூர்த்தி காலஞ் சென்று ஒரு வருஷம் ஆகி விட்டது என்பதை எண்ணும்போது நமக்கு என்னவோ செய்கிறது. வாழ்வின் நிலையாமையைத்தான் என்னவென்று சொல்வது? தாய் நாட்டுக்கு எவ்வளவோ அரும்பெரும் சேவைகள் செய்து கடைசியில் தாய் நாட்டுப் பணியிலேயே உயிர் நீத்த தீரர் சத்தியமூர்த்தியைத் தமிழ் மக்கள் மறத்தல் பாவமாகும். அவருடைய ஞாபகார்த்தமாக வசூலிக்கப் பட்டு வரும் நிதிக்கும் தமிழ் மக்கள் தாராளமாகப் பணம் கொடுத்து உதவ வேண்டும். வருகிற வாரத்தில் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் பொதுக் கூட்டங்கள் முதலியவற்றிலும் தமிழ்மக்கள் மனப்பூர்வமாய் ஈடுபட்டுக் காலஞ் சென்ற தேச பக்த வீரருக்குத் தக்க மரியாதை செய்வார்கள் என்று நம்புகிறோம்.

பிடிவாதக்காரர்



இந்திய சர்க்காரின் ஹோம் மெம்பர் பதவிக்குப் புதிதாக வரும் மிஸ்டர் ஆர். எப். மூடி, ஸி. எஸ். ஐ., ஸி. ஐ. இ., ஓ. பி. இ. வெகு பிடிவாதக்காரர் என்றும், ஸர் மாக்ஸ்வெல்லை விட அவர் கடுமையாக நிர்வாகம் செலுத்துவாரென்றும் சொல்லப்படுகிறது.

கல்யாண காலங்களுக்கு

உங்கள் மனத்திற்குப் பிடித்தமான புது ரக பட்டு புடவைகளுக்கும் மற்றும் இதர ஜவுளி நினுசுகளுக்கும் மிகவும் பிரஸித்தி பெற்ற இடத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்

ராதா ஸில்க் எம்போரியம்

1/14 சந்நதித் தெரு :: மயிலாப்பூர்

பிராஞ்சு:

பெரிய தெரு, கும்பகோணம்



"சந்திரோதயம்"

மாத மிருமுறைத் தமிழ்ப் பத்திரிகை

மறுபடியும் 1944 ஏப்ரல் 1உ முதல் வெளிவரும்.

எல்லா இடங்கட்கும் டெபாஸிட் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

விபரங்களுக்கு:

சந்திரோதயம் காரியாலயம்

7-149, பிராட்வே :: சென்னை

கல்கி

மலர் 3 } தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் { இதழ் 24

என்ன சேதி?

"தினசரி"ச் சேதி ●

உண்மையான தினசரிச் சேதிகளையும், உறுதியான தேசிய அபிப்பிராயங்களையும் எங்கே படித்துத் தெரிந்து கொள்வதென்ற கவலை இனிமேல் தமிழர்களுக்கு வேண்டிய தில்லை. "தினசரி" என்ற பெயருடனே புதிய தினசரிப் பத்திரிகை கூடிய சீக்கிரத்தில் வெளியாகப் போகிற தென்னும் சேதியை அளவற்ற மகிழ்ச்சியுடன் தமிழ் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். புதிய தமிழ் 'தினசரி' என்றதுமே, அதன் ஆசிரியர் யார் என்பதை நேயர்கள் ஊகித்திருப்பார்கள். ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கத்தைத் தவிர வேறு யாராகத்தான் இருக்க முடியும்? இந்த யுத்த காலத்தில், இவ்வளவு காகித நெருக்கடி, கட்டுப்பாடு, நிர்ப்பந்தங்களுக்கிடையில் "புதிய தினசரிப் பத்திரிகை ஆரம்பிக்கிறேன்" என்று சொல்லிப் பிரயத்தனம் தொடங்கும் தைரியம் வேறு யாருக்குத்தான் இருக்கக்கூடும்? அந்தப் பிரயத்தனத்தில் வெற்றிபெறும் ஆற்றல்தான் தமிழ் நாட்டில் வேறு யாருக்கு உண்டு?

முட்டுக் கட்டை ●

இந்தக் காலத்தில் புதிய பத்திரிகை தொடங்குவதற்கு இந்திய சர்க்காரின் அநுமதி வேண்டும். காகிதக் கோட்டாவுக்கு சர்க்கார் உத்தரவு வேண்டும். தினசரிப் பத்திரிகை அச்சடிக்கக் கூடிய 'ரோடரி' அச்சியந்திரங்கள் கிடைக்க வேண்டும். கிடைத்த அச்சியந்திரங்களைச் சென்னை கொண்டு வந்து சேர்க்க ரயில் அல்லது கப்பல் வசதி வேண்டும். இதற்கெல்லாம் பணம் வேண்டும். இவ்வளவையும் சம்பாதித்துக் காரியத்தைத் தொடங்குவதற்கு அளவிலாத மனோ தைரியமும் செயல் திறமையும் வேண்டும்.



தீரர் சத்தியமூர்த்தி

மேலே கூறிய மலையைப் புரட்டும் காரியம் ஒவ்வொன்றையும் மிகக் குறைந்த காலத்தில் நமது சகோதரப் பத்திரிகைத் தொழிலாளி ஒருவர் எப்படியோ சாதித்திருக்கிறார் என்பதை அறியும்போது நமக்கு உண்டாகும் பெருமைக்கும் பூரிப்புக்கும் அளவில்லை.

அதுபோலவே, ஸ்ரீ சொக்கலிங்கத்தின் முயற்சிக்கு முதலாளிப் பத்திரிகைக்காரர்கள் முட்டுக்கட்டை போட்டார்கள் என்பதை அறியும்போது துக்கமும் அவமானமும் நமக்கு ஏற்படுகிறது. இந்தக் காலத்துப் பத்திரிகைகளில் பெரும்பாலானவை தேச சேவைக்குப் பயன் படுவதற்குப் பதிலாக, முதலாளிகள் தங்களுடைய பணத்தையும் செல்வாக்கையும் பெருக்கிக் கொள்ளும் சாதனங்களாகி விட்டன என்பதை ஸ்ரீ சொக்கலிங்கத்துக்கு ஏற்பட்ட இடையூறுகள் ஐயமற ஸ்தாபிக்கின்றன.

பூரிப்பார்கள் ●

எல்லா இடையூறுகளையும் தாண்டி ஸ்ரீ சொக்கலிங்கம் தமது புதிய "தினசரி"க்குச் சர்க்கார் அநுமதியும், காகித ஸப்ளையும், இயந்திர வசதியும் பெற்று விட்டார் என்று அறிந்து தமிழ் மக்கள் பூரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. தினசரிப் பத்திரிகை படிப்பதில் தமிழர்களுக்கு அமோகமான மோகத்தை உண்டாக்கியவர் ஸ்ரீ சொக்கலிங்கம். தினசரிப் பத்திரிகையில் அவருடைய


அடுத்த நிமிஷம் இந்த கைகள்
எப்படி
இருக்கும்?
—குழந்தை 'அழுக்கு
அபாய'த்திலிருந்து காப்பாற்
றப் படுவது ஒரு வரம் போன்றது!
ஒரு நிமிஷம் களிமண்ணுல் கானயங்கள் செய்வதும், மறு நிமிஷம் தரையில் கடை வைத்து விளையாடுவதுமாக இருப்பதால் அவன் கையிலிருக்கும் அழுக்கு எப்படிப் பட்டதென்றும் அதில் என்னென்ன கிருமிகள் இருக்குமென்றும் சொல்ல முடியாது. ஆனால் தவறாமல் லைப்பாய் சோப்பால் சுத்தம் செய்துகொள்வதால் அவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறான்.
அவனுடைய பெற்றோர்கள் லைப்பாய்தான் குடும்பத்தை ஆரோக்கியமாகவும், சுகமாகவும், இருக்கச் செய்கிறதென்று சொல்லுவார்கள். அவர்களுக்கு அழுக்கில் வெகு பயங்கரமான கிருமிகள் இருக்கின்றன வென்றும், அவை எவ்வளவு சுலபமாக நோய் உண்டாக்கி அதைப் பரவச் செய்யும் என்றும் தெரியும். தவறாமல் அடிக்கடி விஷக்கிருமி நாசன சோப்பான லைப்பாயால் சுத்தம் செய்தால் அது குழந்தைகளை இந்த அபாயத்திலிருந்தும் காப்பாற்றும். ஆரோக்கியத்தைப் பாதுகாக்கக்கூடிய ஒரு அதிசய குணம் இந்த சோப்பிற்கு உண்டு. இந்தியாவில் மற்றெந்த சோப்புக்கும் இக் குணம் இல்லை.
லைப்பாய் நல்ல சோப்புகளைக்
காட்டிலும் சிறந்தது
LIFEBUOY
L. 80-56 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி

பொருளடக்கம்

மலர் 3 }
இதழ் 24 }

1944 மார்ச் 20

{ சுபானு
{ பங்குனி 7

அரசியல்

என்ன சேதி?	...	...	5
அயர்லாந்தைப் பார்!	...	...	11
சேராத கடிதம்	...	...	16

இலக்கியம்

விதுரன்	ராஜாஜி	...	18
கம்பர் தரும் காட்சி	டி. கே. சி.	...	34

கதைகள்

ஐயர்வாள் செல்வம்	சுத்தானந்த பாரதி	...	20
சிவகாமியின் சபதம்	கல்கி	...	28
விடுதலை வேண்டாம்	பி. வி. சுப்ரமண்யம்	...	43
இடம் கிடைத்ததா?	பகீரதன்	...	47
வேலைக்கு மனு	பாரு	...	48
தீர்ந்த கவலை	ராஜு	...	51

பாப்பா மலர்

அணிலின் விருந்து	ராஜி	...	38

பல சரக்கு

காலக்ஷேபம்	...	...	40
ஆகாச வெடி	...	...	16

கார்ட்டூன்

நிகழ்ச்சிச் சித்திரம்	உடம்மன்	...	8


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்கள்.

"மக்கள் — துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள் சூழ்ந்ததும் இந்நாடே"

என்று பாரதியார் பாடிய வண்ணம் பாரத நாட்டில் இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையில் எத்தனை எத்தனையோ கோயில்கள் மக்களின் மனத் தூய்மைக்கும் ஈசுவர பக்திக்கும் அறிகுறியாக வளர்ந்தோங்கியிருக்கின்றன. அவற்றுள் கண்ணன் வளர்ந்த பிருந்தாவனத்தில் உள்ள மதன் மோஹன் கோயிலை இந்த இதழ் அட்டையில் காண்கிறோம். செந்நிறக் கல்லைக் கொண்டு சிறந்த வேலைப்பாடுடன் கட்டப்பட்ட இந்தக் கோயிலை நேரில் பார்க்கும் போது "காணக்கண் கோடி வேண்டும்" என்று தோன்றும். பக்த மீராபாய் கண்ணனைப் பாடி மகிழ்ந்த கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.

புகைப் படம்: எல்லீஸ் ஆர். டங்கன்.




விருந்தினர்கள் எப்பொழுதும் விரும்பும் மிகச்சிறந்தவை நரஸூஸ்-டீயும் காபியும் தான் என்பது வீட்டு எஜமானிக்கு நன்றாகத் தெரியும்.
நரஸூஸ்
இந்தியத் தயாரிப்பில் தலைசிறந்தது
MNK 21.
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி சேலம் தென்னிந்தியா



மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்.
S. கண்ணன் & கம்பெனி, திருச்சிறப்பள்ளி.